

# திருக்கோயில்

மே 1991 விலை ரூ. 3





மேதகு ஆளுநர் அவர்களின் ஆலோசகர் திரு இராமச்சந்திரன், ஐ.ஏ.எஸ். (ஓய்வு) அவர்கள் திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் ஆலயத்திற்கு வருகைதந்து தங்கரதம் இழுத்தார்கள். ஆலய நிர்வாக அதிகாரியும் துணை ஆணையாளருமான திரு வே.முனியசாமி எம்.ஏ., பி.எல்., அவர்கள் உடன் உள்ளார்கள்.

---

மயிலை அருள்மிகு கற்பகாம்பாள் ஆலயத்தில் சுபாசினி சங்கத்தார் தங்கக்கிளியை அம்பிகைக்கு வழங்கினர். ஆணையாளர் திருதிரு வ. ராமதாஸ், ஐ.ஏ.எஸ்., அவர்கள் பெற்றுக்கொள்ள, துணை ஆணையாளர் திரு கு. சிதம்பரம் அவர்கள் உடன்உள்ளார்.



முகப்பு:

திருத்தணி

அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034.
தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

மாலை 33 | திருவள்ளுவர் ஆண்டு 2022 பிரஜோற்பத்தி ஆண்டு வைகாசி
மே 1991 விலை ரூ. 3-00 | மணி : 5

## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர்களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

உயர்திரு ஆணையர் அவர்கள்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

### சந்தா விவரம்

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

## பொருளடக்கம்

அருளாளர்களின் அருள் அநுபவம்
—திருமந்திரச்செம்மல் டி.வி. வெங்கட்ராமன் ஐ.ஏ.எஸ்.

கந்தவேள் கருணை
—டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்

சத்தியவான் சாவித்திரி
—சுவாமி விவேகானந்தர்.

நீங்கா இளமை தந்த ஊடல்
—அறநெறியண்ணல் கி. பழநியப்பனார்.

திருமுருகன் திருவருள்
—புலவர் ச. சோமசுந்தரம்

அரசாள்வார் ஆணை நமதே
—மு. கிருட்டிணன் ஐ.ஏ.எஸ். (ஓய்வு)

விநாயகனே வெவ்வினையின் வேரறுக்க வல்லான்
—கோ. சண்முகம் பி.காம்.

சித்திரபாரதம் —செவ்வேள்


ஆடல் காணீரோ திருவிளையாடல் காணீரோ
—வே. தியாகராஜன்

சுவாமிமலை வாழும் பெருமாளே
—பாரதி தீர்த்ததாசன்.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு



# அருளாளர்களின் அருள் அனுபவம்



திருமந்திரச்செம்மல் டி.வி.வெங்கட்டராமன் ஐ.ஏ.எஸ்

[1]

மனிதன் ஆறறிவு பெற்றவன். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக தனது அறிவாற்றலைப் பயன்படுத்தித், தான் வாழும்நிலையை உயர்த்திக் கொள்ள, பல்வேறு முயற்சிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு வெற்றியும் கண்டுள்ளான். இயற்கை ஆற்றலின் தன்மையையும், விதிமுறைகளையும் கண்டறிந்து அவற்றை தனது வாழ்க்கையின் வளத்திற்காக நன்றாகப் பயன்படுத்தியுள்ளான். ''இயற்கையின் குணாதிசயங்களை கண்டுகொண்டு அவற்றை ஆளுக'' என்னும் கோட்பாடே நமது நாகரிகத்தின் வியப்புமிக்க சாதனைகளுக்கு மையமாக இருந்து வருகிறது.

விஞ்ஞானத் துறையில் மனிதன் புரிந்துள்ள சாதனைகள் பகுத்தறிவின் அடிப்படையில் அமைந்துள்ளன. இந்த அறிவினைப் பெற நாம்




திருமந்திரச் செம்மல்
**டி. வி. வெங்கட்டராமன், ஐ.ஏ.எஸ்.**

நமது உடல், அதைச் சார்ந்த கருவிகள், உட்கருவிகள், ஐம்புலன்கள் போன்றவற்றைப் பயன்படுத்துகிறோம். இக்கருவிகள் புறத்தோற்றத்தை நோக்கி இயல்பாகவே செல்கின்றன. புறத்தோற்றத்தின் விஷய அனுபவத்தில் ஈடுபடுகின்றன. ஒவ்வொரு விநாடியும் இந்த விஷய அனுபவங்கள் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய கருவிகளைத்தாக்குகின்றன. ஐம்பொறிகள் வழியாக இந்தத் தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மனம் விஷய அனுபவங்களைச் சேகரிக்க, புத்தி அவற்றைப் பாகுபடுத்த, அகங்காரம் அவற்றிற்கு ஒரு எழுச்சியைக் கொடுக்க, சித்தம் அவற்றிற்கு ஒரு விளக்கம் கொடுத்து கிடைத்த அனுபவத்தை அறிவாக்க, அந்த அறிவு நமக்கு ''நாம் ''நமது'' என்கிற உணர்வினைக் கொடுத்து நம்மை ஒருவிதமான மாயையில் ஆழ்த்துகின்றது. நமது அன்றாட வாழ்வில் நாம் ஏதாவது ஒரு சிறிய சாதனையைப்புரிந்திருந்தாலும் அது நமது சாதனை, அதை நாம் புரிந்தோம் என்று எண்ணி, மகிழ்ச்சியடைந்து, பெருமிதம் கொண்டு நம்மைப் பிறரிடமிருந்து பிரித்துக் கொண்டு வேற்றுமைகாட்டி நமக்கென்று ஒரு தனித்தன்னையை நாம் சதா வலியுறுத்தி வருவதும் இந்த கருவி, கரண இயக்கத்தின் அடிப்படையில்தான். இந்த இயக்கம் நமது உடலில் நடைபெறுகிறது. நமது உடல் ஐம்பூதங்களால் ஆகியது. அங்கே ஞான இந்திரியங்களாகிய ஐந்து பறவைகள் தங்குகின்றன. அவை ஐம்புலன்கள்வழி சதா செல்லுகின்றன. இத்துடன் நமது உடலில் ஐந்து கன்மேந்திரியங்கள் உள்ளன. அவை புரியும் செயல்களும் உடலுக்கு அனுபவத்தைச் சேர்க்கின்றன. இவ்வாறு ஒரு இயக்கம் நடைபெறுகின்றதென்றால் அதை நடத்த ஒருவன் வேண்டும். அதுவே உடலை இருப்பிடமாகக் கொண்ட உயிராகும். உயிரானது உடலின் பல்வகைக் கருவிகளைத் தனது இயக்கத்திற்கு பயன்படுத்தி வருகின்றது. இதைத் திருமந்திரம் அழகாக எடுத்துக்காட்டுகிறது.

''புலம் ஐந்து புள் ஐந்து புட்சென்று மேயும்
நிலம் ஐந்து நீர்ஐந்து நீர்மையும் ஐந்து
குலமொன்று கோல்கொண்டு மேய்ப்பான் ஒருவன்
உலம் வந்து போம்வழி யொன்பது தானே''.

(திருமந்திரம். 2025)

கருவிகள் கருவிகளே. அவை சடப்பொருள்கள். தானாக இயங்கமாட்டா. உயிரின் அறிவாற்றலால் அவை இயங்குகின்றன. எனினும், கருவி கரணங்களோடு உயிரானது இணைந்து செயல்படும்பொழுது, கருவி கரணங்களே

தானாகவே இயங்குவது போன்ற ஒரு பிரமை நமக்குத் தோன்றுகிறது. உயிர்வேறு, கருவி கரணங்கள் வேறு என்கிற நிலை அறியப்படாத பொழுது கருவி கரணங்களே தன்னிச்சையாக செயல்படுகின்றன என்கிற மயக்கம் நம்முள் எழுகிறது. உயிருக்குக்கருவி கரணங்கள்தேவை. கருவி கரணங்கள் இல்லாத பொழுது உயிர் இருளில் மூழ்கிக் கிடக்கும். இறைவன் அருளால் உயிருடன் உடலும், கருவி கரணங்களும் பிறப்பின்போது சேருவதால் உயிருக்கு விளக்கம் பெறக்கூடிய வாய்ப்பு கூட்டுகிறது. விஷய அனுபவங்களைப் பற்றிய• அறிவைப் பெறுவதற்கும் தகுதி கிடைக்கின்றது. விஷய அனுபவங்களையே உண்மையானவை என்றும் அவற்றைப் பெற வசதி செய்து கொடுக்கும் உடம்பும் கருவிகளுமே உண்மையானவை என்றும் ஒருவித விபரீத உணர்வும் உயிருக்குத் தோன்றத் தொடங்குகின்றது. நாய் வாலாட்டும். வால் நாயை ஆட்டுமா! உடம்பைப் பற்றி நம்முடைய மனதிலே தோன்றும் விபரீத எண்ணம் வால் நாயை ஆட்டுவது போல் உள்ளது.

கருவி கரணங்கள் வழியாக நாம் பெறும் அறிவு உயிரைச் சேர்ந்த அறிவாகும். உயிருக்கு அறியும் தன்மை உண்டு. உயிரே அறிவுமயம் எனவும் கொள்ளலாம். ஆனால் உயிரானது எத்தகைய அறிவினைப்பெறுகிறது என்பதுஉயிரின் பக்குவ நிலையைப் பொறுத்திருக்கின்றது.

ஆகவே நாம் பெறும் விஷய அனுபவங்களைப் பற்றிய அறிவு உயிரின் திறனுக்கேற்ப நிற்கும். இந்த அறிவு நமது கல்வி கேள்விகளுக்கு அடிப்படையாக அமைந்துள்ளது. மனிதனின் ஆக்கப்பூர்வமான சக்தி இந்த அறிவைப் பயன்படுத்திக்கொண்டு மனிதன் பல துறைகளில் முன்னேற வழிவகை செய்கிறது. சமுதாய வளர்ச்சிக்குஇந்த அறிவே மையமாகிறது. விஷய அனுபவங்களின் அறிவு விஞ்ஞானம், கலை, பண்பாடு, ஆகிய துறைகளில் மனிதன் பல பிரமிக்கத்தக்க சாதனைகளைப் புரிய பயன்பட்டுள்ளது. அறிவே ஆற்றல் என்று மேலை நாட்டு அறிஞர்கள் கூறும் அளவுக்கு ஐம்பொறிகள் வாயிலாக கிடைக்கக்கூடிய அனுபவ அறிவு மனிதனின் சிந்தனையில் பெருமைக்குரிய இடத்தைப் பெற்றிருக்கிறது.

ஆனால், இந்த அறிவு ஒரு சிறிய வட்டத்துள்தான் இயங்கும். விஷய அனுபவங்கள் புலன், பொறிகளின் செயல்களுக்கேற்ப உயிரை வந்து சேரும். பொறி, புலன்கள் உடலைச் சார்ந்த கருவிகளாதலால் அவற்றின் செயல்கள் உடலின் நிலையைப் பொறுத்திருக்கும். உடலை உயிர் இயக்கும் காரணத்தினால் உயிரின் நிலை கருவி கரணங்களின் செய்கைகளை வெகுவாக பாதிக்கும். உடலும் அதன் கருவி கரணங்களும் நிலையற்றவை. அழியும் தன்மை பெற்றவை. ஆக, அவற்றின் வழியாகப் பெறக்கூடிய அனுபவமும், அறிவும் நிலைத்து நிற்காது. அவை காலத்தின் போக்கால் கட்டுப்படுத்தப்படும். காலம் என்பது நிகழ்வதையும், நிகழ்ந்ததையும், நிகழப்போவதையும் வேறுபடுத்தி நமது சித்தத்திற்கு அளிக்கும்பொழுது விஷய அறிவு அனுபவங்களுக்குக்கலை எழுச்சியூட்டும். அனுபவங்களின் தன்மை உயிரின் கன்ம பலத்தின் அடிப்படையில் அமையும். கலையும் நியதியும் உயிரானது பல பிறவிகளில் பெற்ற வினைக்கூட்டங்களும் பொறி புலன்களின், காட்சி அனுபவங்களின் உண்மைத் தன்மையை மாற்றியும் விடும்.

விஷய அறிவு, பொதுவாக, பொருட்களைப் பற்றியதாக இருக்கும். ஏனென்றால், ஐம்பொறிகளும் ஐம்புலன்களும் புறத்தேயுள்ள பொருட்களின் மீது இயல்பாகவே கூடுதலாக தங்களுடைய நாட்டத்தைச் செலுத்தும், கருவி கரணங்கள் பொருட்களைப்பற்றியஅறிவினைப் பெறுவதுநேரிடையாகவும்இருக்கலாம், மறைமுகமாகவும் இருக்கலாம். கண்ணால் பார்த்தும், காதால் கேட்டும்பொருட்களைப்பற்றித்தெரிந்துகொள்ளலாம். அத்துடன் சூக்குமமாக இருக்கும் பொருட்களைப் பற்றியும் யூகித்தல், அனுமானித்தல் போன்ற வழிகளில் அறிந்துகொள்ளலாம். ஒரு பொர்ருளைப் பார்க்கிறோம். நேராகத்தெரிந்துகொள்கிறோம். அப்பொருளிலுள்ள கோடிக்கணக்கான அணுக்களை நாம் பார்க்க முடிவதில்லை. ஆனால், அதற்காக நிறுவப்பட்ட கருவிகளை வைத்து அவற்றை பார்த்துக் கொள்கின்றோம். இல்லாவிட்டால் அவற்றினுடைய தன்மையைப் பற்றி மறைமுகமாக தெரிந்து கொள்கிறோம். பௌதிகம், இரசாயனம், தொழில்நுட்பக் கல்வி போன்ற பல விதமான துறைகளில் நாம் இன்று பெற்றுள்ள அறிவு நமது பொறிகள், புலன்கள், மனம், புத்தி, சித்தம், அகங்காரங்கள் ஆகிய உட்கருவிகள் இணைந்து செயல்பட்டதன் விளைவே ஆகும். பொறி புலன்களிலிருந்து வெளிப்படும் அறிவு மீண்டும் மீண்டும் அவற்றையே வலுப்படுத்தமுயலும். அதனால்கிடைக்கக்கூடிய இன்பங்களை வளர்த்தும், துன்பங்களைத் தவிர்த்தும் வாழ்க்கையை புலன் அனுபவப் பாதையிலே செலுத்துவது உயிருக்கு இயல்பாகிவிடுகிறது. இந்த அறிவினால் உயிருக்கு உடல் மீது உள்ள பாசம் வளரும்.

மேற்கூறிய அறிவைத் தவிர வேறு எத்தகைய அறிவும் இல்லை என்று நமது உள்ளத்திலே ஒரு எண்ணம் எழுவதும், அந்த அறிவின் விளைவே என்று நாம் தெரிந்துகொள்ள வேண்டும். உண்மையில் வேறு ஒரு அறிவு உள்ளது. நாம் இப்பொழுது பெற்றுள்ள அறிவைச் சிற்றறிவு என்றும், பெற்றிராத அறிவை பேரறிவு என்றும் குறிப்பிடுவது வழக்கம். சாந்தோக்கிய உபநிடதத்தில் ஒரு நிகழ்ச்சியில் இதைப் பற்றிய உரையாடல் ஒன்று வருகிறது சனத்குமார முனிவரிடம் நாரதர் சென்று தனக்கு தக்க அறிவினை புகட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றார். ''உனக்குத் தெரிந்ததைப் பற்றிச் சொல், தெரியாததைப்பற்றிப்பின்னர் விளக்குகின்றேன்'' என்கிறார் சனத்குமாரர்.

''எனக்கு வேதங்கள் தெரியும், இதிகாசப் புராணங்கள் தெரியும், இலக்கணம் கற்றுள்ளேன், கணிதம், தத்துவம், விஞ்ஞானம், பௌதிகம், கலைகள் ஆகியவெல்லாம் நன்கு தெரியும். இவற்றையெல்லாம் நான் கற்றிருந்தும் எனது உள்ளத்திலே ஒரு குறை உண்டு. எல்லா

வற்றையும் நான் முழுமையாகத் தெரிந்து கொண்டதாக ஓர் உணர்வினைப்பெறவில்லை'' என்கிறார் நாரதர்.

''நீ கற்றதெல்லாம் பெயரளவில்'' என்று சனத்குமாரர் பதிலளிக்கிறார்.

ஒளவையார் கற்றதெல்லாம் கைம்மண் அளவு என்றார். சனத்குமாரர் கற்றதெல்லாம் பெயரளவில்தான் என்கிறார்.

ஒவ்வொரு பொருளுக்கும் உருவம் உண்டு. பெயரும் உண்டு. பெயரையும் உருவத்தையும் வைத்து அப்பொருளின் தன்மையை இடத்தை, காலத்தை நிர்ணயித்துக் கொள்கின்றோம். பெயரும் உருவமும் ஒரு பொருளைச் சுட்டிக் காண்பிக்கின்றன. அதாவது, அவற்றால் ஒரு பொருள் உண்டு என்பதை அறிந்துகொள்ள வேண்டும். நாரதர் கற்ற கல்வி பெயரளவில் தான் என்று சனத்குமாரர் கூறும்பொழுது அந்தக் கல்விக்கு அப்பால் வேறொரு கல்வி உள்ளது, வேறொரு அறிவு உள்ளது. அந்த அறிவே இந்தக் கல்விக்கு அதனுடைய விசேஷ தன்மையைக் கொடுக்கின்றது என்கிற உணர்வு நம்முள் தோன்றுகிறது. பெயர், பெயரிலிருந்து வாக்கு, வாக்கிலிருந்து மனம், புத்தி, சித்தம், தியானம், ஞானம், வலிமை, உணவு, நீர், நெருப்பு, ஆகாயம், நினைவாற்றல், இச்சை, பிராணன், வாய்மை, சிரத்தை, தவம் என்றெல்லாம் படிப்படியாக சனத்குமாரர் நாரதருக்கு அவர் பெற்ற அறிவின் தன்மையை விளக்கிப் பரம்பொருள் விளக்கத்திற்கு அழைத்துச் சென்று பரம்பொருளைப் பற்றிய அறிவே, பரம்பொருளே எல்லாவற்றிற்கு மேலான அறிவென உள்ளத்தில் பதிய வைக்கின்றார்.

பரம்பொருளைப் பற்றிய அறிவு முழுமையான அறிவு எனப்படும். நாம் கருவி கரணங்களைப் பயன்படுத்தி பெறும் அறிவு பகுதி அறிவாகும். விஞ்ஞான அறிவு நமக்கு கொடுக்கும் அறிவு பகுதி அறிவுதான். ஒரு பொருளைப் பற்றி நாம் தொடர்ந்து விசாரித்துக்கொண்டே போனால் அந்த விசாரணையின் வழியாக நமக்கு பற்பல அறிவு கிட்டலாம். ஆனால், இத்தகைய அறிவு உடலுடன் இயங்கும் கருவி கரணங்களின் வழியாக பெறப்படும் அறிவாகையால் இது இடம், காலம் முதலியவற்றால் கட்டுப்படுத்தப்பட்டது. நான் என்கிற முனைப்பின் அழுத்தத்தால் வெளிப்படும் அறிவின் திறன் நம்முடைய குறைந்த ஆற்றலையே பிரதிபலிக்கும் தன்மையுடையது. முழு அறிவு என்பது ஒரு மிகப்பெரிய வட்டமாகும். பகுதி அறிவு இந்த வட்டத்தில் எங்கோ ஒரு சிறிய பகுதியை இடம் கொண்டதாகும். சிற்றறிவு என்றுமே முழுமையான அறிவாகாது. அதே நேரத்தில் முழு அறிவாகிய பெரிய வட்டம் சிற்றறிவுப் பகுதிகளை தன்னுள் அடக்கி நிற்கும். முழு அறிவாகிய பெரிய வட்டத்தின் தன்மையை மாற்ற முடியாது. அது நிலையான தன்மை பெற்றது. சிற்றறிவுப் பகுதிகளின் தன்மை மாறிக்கொண்டே இருக்கும். அதையே விஞ்ஞான வளர்ச்சி என்கின்றோம். விஞ்ஞான அறிவு வளர வளர நாம் முன்பு பெற்றிருந்த அறிவை ஆழப்படுத்தியும் அகலப்படுத்தியும் புதிய உண்மைகளைச் சேகரித்துக் கொள்கின்றோம். ஆனாலும் இவ்வாறு நாம் பெறும் அறிவு முழுமையான அறிவாகாது. நம்மை ஒரு மயக்கத்திலே ஆழ்த்தும். அத்தகைய அறிவின் வளர்ச்சி ஆற்று வெள்ளத்தோடு போகும் பொருட்களைப் போல நம்மை கட்டுக்கடங்காத நிலைக்கு அழைத்துச் செல்லும். இதனை

''அறிவு ஐம்புலனுட னேநான்ற தாகி
நெறியறி யாது உற்ற நீராழம் போல''

(திருமந்திரம் 119)

என்பார் திருமூலர்.

இந்த அறிவைப் பெறுவதும், இந்த அறிவினால் இன்ப துன்பங்களை அநாதி காலம் முதல் தாங்கி அனுபவிப்பதும் உயிராகும். உயிர் அறிவுடைய பொருள்தான். ஆனால், அதனுடைய அறிவாற்றல் சிறியது. ஐந்து இந்திரியங்கள், ஐம்புலன்கள், உட்கருவிகள் போன்றவை இல்லாத இடத்தில் உயிரின் அறிவாற்றல் இயங்குவதற்குவழியேஇல்லை. உயிரின்உடைய அறிவாற்றல் வட்டம் சிறியது. பேரறிவாகிய இறைவனின் வட்டம் நமது கற்பனைக்கு எட்டாத அளவுக்கு பெரியது. இதை உணரும் பொழுது நாமே அறிவு, நமது அறிவின் சாதனையே சாதனை என்றெல்லாம் நாம் இறுமாப்படைவது நமது சிறுமையை எடுத்துக்காட்டுகின்றது.

நாமே எல்லா அறிவுக்கும் சொந்தக்காரர்கள் என்பது ஒரு பெரிய வேடிக்கை அல்லவா என்கிறது திருவருட்பயன்.

''பொறிஇன்றி ஒன்றும் புணராத புந்திக்(கு)
அறி(வு) என்ற பேர் நன்(று) அற''.

(செய்யுள்.15)

பேரறிவினைப் பற்றித் தம்முள் உணர்ந்து கொண்ட அருளாளர்கள் இத்துடன் நிற்பதில்லை. முழுமையான அறிவே உண்மையான அறிவென்றும் மற்றதெல்லாம் அறியாமை என்றும் கூறுகிறார்கள். ஏனெனில் உடலின் கருவி கரணங்களைப் பற்றி நாம் பெறும் அறிவு உடலையே சார்ந்திருக்கும். ஆகையால் உடலைப் பற்றிய அறிவு பரம்பொருளைப் பற்றிய ஒரு அறியாமை நிலையில்தான் நம்மைத் தள்ளிவிடும். ஒன்றைப் பார்க்கும்பொழுது மற்றதைப் பார்க்க உள்ளத்திலே ஆவல் எழும்போது அந்த

## மூல மந்திரங்கள்

ஓம் சிவாய நம:

ஓம் நமோ நாராயணாய நம:

ஓம் சரவணபவாய நம:

ஓம் கணபதயே நம:

ஓம் உமாதேவ்யை நம:

அறிவுபாசத்தோடு சம்பந்தப்பட்ட அறிவாகும். அதாவது உயிரைச் சார்ந்த ஆணவம், கன்மம், மாயை போன்ற மலங்கள் அந்த அறிவுக்கு ஒரு உருவத்தைக் கொடுக்கின்றன. நமது மனம் அந்த உருவத்திலே ஈடுபட்டு விடுகின்றது. உருவம் எத்தகைய மூலப்பொருளினால் செய்யப்பட்டிருக்கின்றது என்று அறிந்துகொள்ள நமக்கு ஆவல் எழுவதில்லை. ஆகவே, உருவத்தைப் பற்றிய அறிவு உண்மையிலேயே ஒரு அறியாமையாகும். யானைப் பொம்மையை பார்க்கும் ஒரு குழந்தைக்கு அது மரத்தால் செய்யப்பட்டுள்ளது என்கிற உணர்வு தோன்றுவதில்லை. பல தங்க ஆபரணங்களைப்பார்த்து அதிசயப்பட்டு நிற்கும் பெண்மணிக்கு அவற்றின் மூலப்பொருள் தங்கமே என்கிற உணர்வு தோன்றுவதில்லை. அந்த அளவுக்கு அவள் அந்த ஆபரணங்களின் அழகில், வேலைப்பாட்டில் தனதுமனதைப்பறிகொடுத்து விடுகிறாள். உண்மை அறிவின் முன் நாம் பெற்றுள்ள அறிவெல்லாம் அறியாமைதான் என்கிறார் திருமூலர். இந்த அறிவு, அறியாமை ஆகிய நிலைகளுக்கு அப்பால் ஒரு நிலை உள்ளது. அதுவே ஓர் பேரறிவு நிலை, பேரனுபவ நிலையுமாகும். அந்தப் பேரறிவு நிலை கதிரவனின் ஒளி போல மற்ற எல்லா அறிவு நிலைகளையும் அருளிகிலிருந்து மீட்டுப்பிரகாசப்படுத்துகின்றது. அந்த அறிவு நிலைக்குச் சமானம்வேறொன்றுமில்லை. அது பேரானந்தத்தைக் கொடுக்கும். திருமூலர் கூறுவது போலவே அது ஓர் அழகிய நிலையாகும். தன்னிலை விளங்கும். பிற உயிர்களுடைய நிலையும் தெளிவாகும். நமது உயிரின் இயக்கத்திற்கான மூலகாரணங்களாகிய ஆணவம், கன்மம், மாயை போன்றவைகளுக்கும் சுத்தமான விளக்கம் கிடைக்கும்.

''அறிவு அறிவு என்று அங்கு அரற்றும் உலகம்
அறிவு அறியாமை யாரும் அறியார்
அறிவு அறியாமை கடந்தறிவானால்
அறிவு அறியாமை யழகிய வாறே''.

(திருமந்திரம். ..2362)

இன்றைய உலகில் கல்விக்கு ஒரு பெரிய இடத்தை நாம் கொடுத்திருக்கின்றோம். கல்விக் கூடங்களில் விஞ்ஞானத்தைப் பற்றிய கல்வி முதலிடம் பெறுகிறது. விஞ்ஞானத்தை மேலும் மேலும் கற்று, விஞ்ஞானக் கல்வியை வாழ்க்கைஇன்பத்திற்காகப்பயன்படுத்தி, வசதிகளைப் பெருக்கிக் கொள்வதே ஒரு சிறந்த குறிக்கோளாக வைக்கப்பட்டுள்ளது. இத்தகைய கல்வியால் ஒழுக்கமோ, அடக்கமோ, நேர்மையோ, சீலமோ கற்பவர்களுக்கு கிடைக்குமா என்று நாம் பெரிதும் கவலைப்படுவதில்லை. அதற்கு மேலாக நம்முடைய உள்ளங்களிலே பரம்பொருளைப் பற்றிய விளக்கம்கிடைப்பதே நாம் கற்கும் கல்வியின் பயனாக அமைய வேண்டுமென்றும் நாம் எதிர்பார்ப்பதில்லை. ஆனால் நமது முன்னோர்கள் கல்வியின் பயன் இறை உணர்வு என்றும், அந்த உணர்வின் விளைவு ஒழுக்கம் என்றும், அந்த ஒழுக்கத்தைப் பெற்றவர்கள் நற்கல்வி கற்றவர்கள் என்றும் அறிவுறுத்தினர். ''கரிப்பு (உவர்ப்பு) அறியா மிகும் கல்வி கற்றேனே'' என்றார் திருமூலர். ''துணையது வாய்வருந் தூயநற் கல்வியே'' என்பதும் அவரது திருவாக்காகும். அத்தகைய கல்வியைப் பெறுவதே நமது குறிக்கோளாக அமைய வேண்டும். அத்தகைய அறிவினைப்பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளாமல் சிற்றறிவினை கூட்டிக்கொண்டு போவதில் பயனில்லை என்கிறார் திருமூலர். மாறாக நம்முடைய முயற்சிகள் இறை அறிவைப் பெறுவதில் செலுத்தப்படவேண்டும். நம்முடைய முயற்சிகளின் பலனாக, இறைவனுடைய திருவருளால் பரம்பொருளைப் பற்றிய ஞானத்தை நாம் பெற்றோமாகில் எல்லாவற்றையும் அறிந்த ஒரு நிலையை நாமும் பெற்றுவிடலாமே என்கிறார் திருமூலர். அந்த அறிவே பரஞானமாகும். திருவருள் வைப்பினால் நிகழ்கின்றது. இந்த அறிவினை நாம் உள்ளுணர்வாகப் பெறுகின்றோம். இந்த அறிவு நமக்கு அனுபவத்தால் கிடைக்கின்றது.

''எல்லாம் அறியும் அறிவு தனைவிட்டு
எல்லாம் அறிந்தும் இலாபமங் கில்லை
எல்லாம் அறிந்த அறிவினை நானென்னில்
எல்லாம் அறிந்த இறையென லாமே''.

(திருமந்திரம் 2596)

அருளாளர்கள், இறை உணர்வாளர்கள் இந்த அனுபவத்தைப் பெற்றிருந்தனர். புறக்கண்களால் காண முடியாத ஒன்றை அகக்கண்களால் கண்டு பேரின்பம் பெற்றார்கள். புறக்கருவிகளால் இந்த அனுபவத்தைப் பெறுவது இயலாது. சிற்றறிவு வட்டத்திற்கு அப்பால் நிற்கும் ஒன்றை சிற்றறிவினால் பிடித்துவிட முடியாது.

''முகத்திற் கண்கொண்டுகாண்கின்றமூடர்காள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்''
திருமந்திரம் (2944)

என்கிறது.

பரம் பொருளைப் பற்றிய ஞானக் கல்வி அருளாளர்களுக்கு உள் அனுபவமாக கிடைக்கின்றது. இது திருவருளால் கிடைத்த காரணத்

—(தொடர்ச்சி 32-ஆம் பக்கம்)

## சிவபெருமானின் ஐந்து முகங்கள்

1. ஈசானம் — நடுவில் உள்ள முகம்
2. தத்புருஷம் — கிழக்கில் உள்ள முகம்
3. அகோரம் — தெற்கில் உள்ள முகம்
4. வாமம் — வடக்கில் உள்ள முகம்
5. சத்யோஜாதம் — மேற்கில் உள்ள முகம்



# கந்தவேள் கருணை

## டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்

## [ 40 ]

தலைமை அமைச்சன் தருமகோபன் சூர பன்மனிடம் வந்து வணங்கினான். ''தானவேந்திரா வருந்தாதீர்! இதுவரை பெற்ற வெற்றியை எல்லாம்விட உமது வருத்தமே தமக்குப் பெரிய வெற்றி என்று வானவர் கொக்கரிப்பார்கள். போர்முனையில் இறந்தவர்கள் தந்தையானாலும் புதல்வர்களேயானாலும் அதற்காக வருந்தித் தளர்வது ஆற்றல்மிக்க வீரர்களுக்கு அழகல்ல''.

''முந்துறும் மாற்றலர் முனைவெம் போரிடைத்
தந்தையர் விளியினும் தமர்கள்மாயினும்
மைந்தர்கள் விளியினும் மான வீரர்கள்
சிந்தைகொள் வன்மையிற் சிறிதும் தீர்வரோ?''

''கவர்ந்து சென்ற உயிர்களைத் தர இயமன் இருக்கிறான்; உடலைப் படைத்துத் தர பிரமன் இருக்கிறான். எஞ்சியுள்ள நமக்கும் வலிமை இருக்கவே இருக்கிறது. எல்லாம் இருக்கும்போது ஏன் எங்க வேண்டும்?'' என்று ஆறுதல் கூறினான்.

யமனையும் பிரமனையும் ஆட்டிப் படைக்கும் ஆற்றல் இப்போதே தன் கை மீறிவிட்டது என்பதை சூரன் அறிவான். எனினும் தன் உடலில் உயிர் உள்ள அளவும் வருந்துவதில்லை என்று தெளிந்தான். ''அமைச்சரே! இயமனைப் போல் நானே சென்று எதிரிகளைஅழித்து வருகிறேன்'' என்று கோபாவேசத்துடன் கூறினான். தருமகோபன் சூரபன்மனை வணங்கி, ''அரசர்க்கரசே! தாங்கள் இங்கேயே இருங்கள், யானே சேனைகளுடன் சென்று பகைவர்களைக் கொல்வேன்'' என்று வேண்டிக்கொண்டான்.

போர்க்கோலம் பூண்ட தருமகோபன் புண்டரீகம் என்ற திக்கு யானை மீதூர்ந்து, பற்பல படைக்கலங்களைத் தாங்கி, போர் முரசறைய அவுண சேனைகளும் அமைச்சரும் சமுத்திரம் போல் சூழப் போர்க்களத்தையடைந்தான். அதனைக் கண்ட தேவர்கள் ''மாவீரர் பலரை வென்றோம். எனினும் புற்றீசல்களாகக் கிளம்பிக் கொண்டேயிருக்கின்றனரே! இதோ யானைமீது மதயானையாக வருபவனை வெல்வதரிது'' என்று அஞ்சியோடினர்.

தருமகோபன் போர்க்களம் அடைந்ததும் பூதர்கள் அவனை எதிர்த்து ஆரவாரம் செய்தனர். பூதப் படைக்குப் பலியான அவுணர் தலைவர் அனைவரும் தருமகோபன் கண்முன் தோன்றினர். அவனது அஞ்சா நெஞ்சிலும் அச்சம் குடிகொண்டது. தன்னைத்தானே தேற்றிக் கொண்டான்.


அவுண சேனைகளும் பூத சேனைகளும் எதிர்த்துப் போராடின.

இலக்கம் வீரர்கள் போர் செய்து இளைத்தனர். அவுண அமைச்சர்கள் முன்னிலும் பன்மடங்கு வீரத்தோடு வணங்கி நின்றார்கள். அவர்களைக் கண்ட வீர மார்த்தாண்டர் வெகுண்டு எழுந்தார். அவர் ஒருவரது சீற்றம் பூதப் படை முழுவதற்கும் புத்துயிரூட்டியது. அவுணர்களைப் பூதர்கள் கொன்று குவித்தனர்.

தன்னுடைய படைகள் அழிந்ததைக் கண்ட தருமகோபன் சினந்து பூதர்கள்மேல் எண்ணற்ற கணைகளை விடுத்தான். அந்தப் பாணங்களின் தாக்குதலால் பூதர்கள் நடுங்கி மெலிந்தனர். புண்டரீகம் என்ற திக்கு யானை பூதர்களைத் துதிக்கையால் தூக்கி வீசியது. காலாலும், வாலாலும் தந்தங்களாலும் பூதரைச் சின்னாபின்னப்படுத்திக் கொன்று வீழ்த்தியது. பூதர்கள் அந்த யானையின் மீது மலைகளை எறிந்தனர்; சரமழை பொழிந்தனர். அந்தப் பாணங்கள் தைத்தலால் திக்கு யானையின் உடல் முழுவதும் உதிரம் பெருக்கெடுத்தோடியது. அந்தத் திக்கஜமோ சிறிது தளர்ச்சியடையாமல் பூத வீரர்களைந் தாக்கிக் கொன்றது.

வீர புரந்தரர் ஒரு வேலை எடுத்துத் தருமகோபன் மார்பை நோக்கி எறிந்தார். தருமகோபன் கதாயுதத்தை எடுத்து வீரபுரந்தரர் மேல் எறிந்தான். அது வீரபுரந்தரர் மார்பிற் பட்டதும், அந்த நிகரற்ற மாவீரரும் துன்பமுற்று நடுங்கி விம்மி வருந்தினார்.

இக்காட்சியைக் கண்ட வீரவாகுதேவர் மனத்தினும் விரைந்து தருமகோபன் முன்னே வந்தார். தருமகோபன் வீரவாகுவின் மீது செலுத்திய பாணங்கள் அவரது திருமேனியில் பட்டு, இரப்பவர்க்கு ஈயாது கரந்து, இரவாத செல்வர்கட்குஈந்த பொருள்போலப்பயனின்றிக் கூர் மழுங்கி வீழ்ந்து அழிந்தன. வீரவாகுதேவர் சினந்து ஒரு வேலை எடுத்து விடுத்தார். அது தருமகோபன் விடுத்த கணைகளை யெல்லாம் அழித்துக்கொண்டு அவனது மார்பைத் துளைத்துச் சென்றது. தருமகோபன் மார்பினின்றும் உதிரம் வெள்ளம் போல் பெருக்கெடுத்தது, ''ஓ'' என்று அலறி வீழ்ந்து மூர்ச்சித்தான் தருமகோபன். அவனது நிலைமையை உணர்ந்த திக்குயானை ஆர்த்து அசைந்தோடி வந்து வீரவாகுதேவரின் தேரைத் தன் கோடுகளினால் தாக்கியது. ஓர் இரும்புலக்கையால் வீரவாகு தேவருடைய தேர்ப்பாகனை அடித்துக் கொன்று தேரையும் அழித்தது. வீரவாகு தேவர் பிறிதொரு தேரின் மீது பாய்ந்து யானை



யின் துதிக்கையை ஒரு கரத்தால் பற்றி மற்றொரு கரத்தால் அதன் கன்னப் பிரதேசத்தில் அறைந்து வெகு தூரத்துக்கப்பால் செல்லும்படி வீசியெறிந்தார். யானை விண்ணுலகுக்கு எழும்பி மீண்டும் போர்க்களத்தில் வந்து வீழ்ந்தது.

மூர்ச்சை தெளிந்த தருமகோபன் மீண்டும் போர் தொடங்கினான். வீரவாகு தேவர் மீது குலிசப் படையை வீசினான். அதனை அவர் கையினாற் பற்றித் தரும கோபனுடைய மார்பில் அடித்தார். திருவடியால் அவனை ஒரு தரம் உதைத்தார். ஆயுதங்களுக்கு இல்லாத ஆற்றல் அவரது திருமேனி அவயவங்களுக்கே இருந்ததுபோலும்! தருமகோபன் உயிர் துறந்தான்.

மயக்கம் தெளிந்து உயிர்த்து மெல்ல எழுந்த திக்குயானை தருமகோபன் மாண்டதைக் கண்டது. அவனது சார்பில் தன் சக்தியெல்லாம் திரட்டிப் போர் செய்து கடமையைச் செலுத்திவிட்டது. இப்போது அது வீரவாகுவை வணங்கி ''எம்பெருமான்! கோபம் கொள்ளாமல் சிறியேன் சொல்வதை அருள் கூர்ந்து கேட்டருளவேணும். நான் திக்கஜம், திசையைக் காவல் செய்பவன். கீழ்மகனாகிய இந்த தருமகோபன் இட்ட சிறையில் பல நாட்கள் வருந்தினேன். அவனுக்கு வாகனமாகி இதுவரை சுமந்து வந்தேன். அவனுடைய ஏவல் பலவற்றைச் செய்து வந்தேன். இன்றோடு நீசன் சேவகம் முற்றுப் பெற்றது. உய்வு பெற்றேன்'' என்று நெகிழ்ந்து கூறியது.

''இனி நீ உன்னுடைய திக்குக்குச் சென்று காவற் பணிபுரியலாம்'' என்று வீரவாகுதேவர் அதற்கு விடை கொடுத்தார். திக்கு யானை தன் இருக்கை சேர்ந்தது.

தருமகோபன் இறந்த செய்தியைக் கேட்ட சூரபன்மன் அறிவிழந்து ஓவியம் போல் கிடந்தான்.

மன்னன் சூரபன்மன் மயங்கியிருந்தபோது தூதர் சிலர் இளவரசன் பானுகோபனை அடைந்தனர். ''அரச குமார! முன்பு நீங்கள் விடுவித்த மாயப் படைக்கலத்தால் நன்னீர்க் கடலில் வீழ்த்தப் பெற்ற வீரவாகுதேவர் முதலியோரை முருகன் பாசறையிலிருந்து கொண்டே வேலால் மீட்டார். அக்கினிமுகன், மூவாயிரவர் தருமகோபன் ஆகியோரும் ஒருவர் பின் ஒருவராகப் போரில் மடிந்தாயிற்று. இரணியனும் மீனாகி ஒளிந்தான். இவற்றையெல்லாம் கேட்டுத் தங்கள் தந்தையார் வெந்துயர் கொண்டுள்ளார்'' என்று கூறினார்கள்.

பானுகோபனுக்கு அவமானமும் ஆத்திரமும் ஆறாத் துயரும் ஒருங்கே பொங்கிவந்தன.

'நமது பெரு வாழ்வுக்கு இறுதி வந்துவிட்டது போலும்' என்று எண்ணினான். ஒருவாறு தன்னைத் தெளிவித்துக்கொண்டு தந்தையையும் தெளிவிக்க நினைத்தான். அவன் மனத்தில் ஒரு தெளிவு பிறந்தது. முருகனை வெல்வது சாத்தியமல்ல என்று தெளிந்து அதனையே தந்தைக்கும் எடுத்துச் சொல்வதற்காக விரைந்தான்.

''நான் நன்னீர்க் கடலில் மூழ்கடித்தவர்களை நொடியில் மீட்ட முருகனின் சக்தியை இன்னும் தாழ்த்தி மதிப்பிடலாகாது. அதிகம் சொல்வானேன்? தாங்களே முதல் நாள் அந்தப் பாலகனோடு போர் புரிய சென்றபோது வில்லம்புகளை இழந்து தோற்று வந்தீர்கள் அன்றோ? இன்னமும் முருகனுக்குக் கோபம் வரவில்லை. அவன் சினமுற்றுவிட்டால் அதனைத் தாங்குவதற்கு எவரால் முடியும்? மாயோன் சக்கரத்தை மாலையாகத் தரித்த தாரகனையும் கிரௌஞ்ச மலையையும் அழித்த வேற்படையை எதிர்ப்பவர் யாவர்?''

''அப்பா! முருகன் முனிந்தால் அண்டங்கள் அனைத்தையும் அழிப்பான்.

''புல்லிதாகிய விலங்கினைப் படுப்பவர் புதலுள்
வல்லியந் தனக்கு உண்டியாய் மாய்ந்திடுங்
கதை போல்
எல்லையில் பகல் அமரரைஅலைத்திடும் யாமும்
தொல்லை நாள் வலி சித்தியே குமரனால்
தொலைந்தோம்''.

அற்பமான முயல் முதலிய சிறிய விலங்குகளைப் புதரில் புகுந்து கொல்பவர் சில சமயம் புதருக்குள் இருந்த புலிக்கு உணவு ஆகி மாள்கின்ற கதைபோல், எண்ணில்லாத காலம் தேவரைத் துன்புறுத்திய நாம் இப்போது முருகப் பெருமானால் வலிமை குன்றி அழிகின்றோம்.

அவனுடைய தூதனாகிய வீரவாகுவை வெல்லுவதுகூட அரிதுதான். நடக்கக்கூடிய காரியத்துக்குத்தான் பெரியோர்கள் நீண்ட நாட்களாயினும் முயற்சி செய்வார்கள். இயலாத செயலில் அறிவுடையோர் ஈடுபடமாட்டார்கள்.

''நெடிது பற்பகல் செல்லினும் நிரம்புவ
தொன்றை
இடைவிடாமலே முயன்றுபெற் றிடுகின்ற
தியற்கை;
உடல்வ ருந்தியும் தங்களால் முடிவுற ஒன்றை
முடியு மீதெனக் கொள்வது கயவர்தம்
முறையே''

அப்பா! வலிமை மிக்க புதல்வர்களை இழந்து வீட்டீர்கள். உங்களுக்கும் எனக்கும் குறிபார்த்து நிற்கிறான் இயமன். போர் என்றால் புறம் கொடுப்பவன் அல்லன் நான். இன்று உங்களிடம் இப்படியெல்லாம் பேசுவதால் போருக்கு அஞ்சினேன் என்று எண்ணிவிடாதீர்கள். நீங்கள் இன்னும் பல்லாண்டு பல்லாண்டு வாழ வேண்டும் என்னும் ஆசையால் இவற்றைச் சொன்னேன். தேவரைச் சிறைவிடுத்து உய்வு பெறுவோம்'' என்று கூறினான்.

சூரபன்மனுக்கு அழிவுகாலம் நெருங்கிவிட்டபடியால் அறிவு பிறக்க மறுத்தது. பானுகோபன் கூறியவற்றைக் கேட்டுச் சினமேயடைந்தான் சூரபன்மன். ''இந்த உலகில் நிலைத்து நிற்கக் கூடியது புகழ் ஒன்றுதான். இப்பொழுது நான் எதிரிகளுக்குப் பயந்து தேவர்களைச் சிறையிலிருந்து விடுவித்தால் என்னை யார் மதிப்பார்கள்?

''கூனொடு வெதிரே பங்கு குருடுபேர் ஊமை
யானோர்
ஊனம தடைந்த புன்மை யாக்கையோ டொழி
யும் அம்மா
மானம தழிந்து தொல்லை வலியிழந் துலகில்
வைகும்
ஏனையர் வசையின் மாற்றம் எழுமையும்
அகல்வதுண்டோ''

''கூன் செவிடு, குருடு, ஊமை முதலிய குற்றங்களையுடையவர்க்கு அமைந்த புன்மை அந்த உடம்புடன் அழியும். மானம் இழந்து பழைய வலியிழந்து உலகில் வாழ்கின்றவர்களுக்கு வந்த பழி எழுமையும் நீங்காது''.

''சூரன் என்று பேர் பெற்ற நான் என் சூரத்தனத்தை ஒருபோதும் இழக்க மாட்டேன். பிடித்த சிறையை ஒருபோதும் விடமாட்டேன். நிலையற்ற வாழ்வை எண்ணி அழியாப் புகழை இழந்துவிடமாட்டேன். உயிரை விட்டாலும் விடுவேனே யன்றி அதிகாரத்தை விடமாட்டேன். மகனே! நீ போருக்கு அஞ்சிவிட்டாய். நீ உன் வீடு சென்று நிம்மதியாய் உறங்கு. நானே போருக்குச் செல்கிறேன்'' என்றான் சூரபன்மன்.

'சரி, இது வினையின் தவிர்க்க முடியாத போக்கு. தந்தையைத் தடுப்பது சாத்தியமல்ல' என்று எண்ணிய பானுகோபன், தந்தையுடன் உறுதுணையாக நின்று போர்புரிய முடிவு செய்து கொண்டான்.

''அப்பா! நான் அறிவில்லாமல் ஏதேதோ கூறிவிட்டேன். அந்தப் புன்மொழியை மனத்தில் கொள்ளாமல் பொறுத்தருள வேண்டும். தாங்கள் இப்போது போருக்குச் செல்ல வேண்டாம். நானே சென்று நம் நகரத்தை அழிக்கும் பூத கணங்களையும், வலிமை மிக்க வீரவாகு தேவரையும் வெல்ல முயலுவேன்'' என்று கூறிப் புறப்பட்டான்.

(தொடரும்)

# சத்தியவான் சாவித்திரி

## சுவாமி விவேகானந்தர்

அசுவபதி என்னும் ஓர் அரசர் இருந்தார். அவருக்கு ஒரு மகள். அவள் அழகிலும் பண்பிலும் சிறந்து விளங்கியதால் இந்துக்களின் மிகப் புனிதமான பிரார்த்தனையைக் குறிக்கும் சாவித்திரி என்ற பெயர் அவளுக்கு வைக்கப் பட்டது. சாவித்திரிக்கு வயது வந்ததும் அவளுக்கேற்ற கணவனைத் தேர்ந்தெடுக்கும்படி அவள் தந்தை சொன்னார். பண்டைக்காலத்தில் இந்த அரசிளங்குமரிகள் மிகச் சுதந்திரமாக வாழ்ந்தார்கள். தங்கள் கணவர்களைத் தாங்களே தேர்ந்தெடுத்தார்கள்.

சாவித்திரி தங்கத் தேரில் அமர்ந்து, தன் தந்தை நியமித்திருந்த மெய்க்காப்பாளர், அரசவைப் பரிவாரம், முதியோர் ஆகியவர் புடைசூழத் தொலைவிலுள்ள இடங்களுக்குப் பயணம் செய்தாள். இடையிடையே பல அரசவைகளிலும் இறங்கிப் பல இளவரசர்களையும் கண்டாள். ஆனால் சாவித்திரியின் உள்ளத்தை யாரும் கவரவில்லை.

இறுதியாக, இந்தியாவில் அந்த நாளில் விலங்குகளுக்கென்று ஒதுக்கப்பட்டதும், விலங்குகளைக் கொல்லக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருந்ததுமான ஒரு காட்டின் உள்ளிருந்த புனிதமான ஒரு ஆசிரமத்திற்கு வந்தாள். அங்குள்ள விலங்குகள் மனிதரைக் கண்டு பயப்படுவதில்லை. ஏரியில் உள்ள மீன்கள் நம் கையில் இருக்கும் உணவுப்பொருளை வந்து உண்ணும். ஆயிரக்கணக்கான வருடங்களாக யாரும் அங்கிருந்த எதையும் கொன்றதில்லை. முனிவர்களும், வயோதிகர்களும் அங்கே சென்று மான்கள், பறவைகள் ஆகியவற்றுக்கிடையில் வசித்தார்கள். மனிதனுக்கு வாழ்க்கையில் அலுப்புத் தட்டும்போது, இந்தக் காட்டிற்குச் சென்று முனிவர்களுடன் வசிப்பான்; தன் எஞ்சிய காலத்தைத் தியானத்திலும் முனிவர்களோடு ஆன்மிகத்தைப் பற்றிப் பேசுவதிலும் கழிப்பான்.

துயமத்சேனன் என்னும் ஒரு அரசர் இருந்தார். அவர் தம் வயதான காலத்தில் கண் பார்வையை இழந்தபோது, அவருடைய எதிரிகள் அவரைத் தோற்கடித்து, அவருடைய அரசைக் கைப்பற்றிக் கொண்டார்கள். பாவம், அந்த முதிய, குருட்டு மன்னர், தம் மனைவியுடனும், மகனுடனும் அந்தக் காட்டிற்கு வந்து தவம் செய்வதில் தம் காலத்தைக் கழித்தார். அவருடைய மகன் பெயர் சத்தியவான்.

பல அரசவைகளையும் பார்வையிட்ட பிறகு, இறுதியாக சாவித்திரி இந்த ஆசிரமத்திற்கு வந்து சேர்ந்தாள். ஆசிரமத்தில் இருந்த முனிவரைக் கண்டு வணக்கம் செலுத்தாமல், எவ்வளவு பெரிய மன்னரும் ஆசிரமத்தைக் கடக்கக்கூடாது. அவ்வளவு மரியாதை இந்த முனிவர்களுக்குக் கொடுக்கப்பட்டது.

சாவித்திரி இந்த ஆசிரமத்திற்குள் நுழைந்து, அங்குச் சத்தியவானை கண்டதும் தன் இதயத்தை அவனிடம் பறிகொடுத்தாள். அரண்மனைகளில் கண்ட அரசிளங்குமரர்களை விட ஆசிரமத்தில் இருந்த, துயமத்சேனனின் மகனான சத்தியவான் அவளது இதயத்தைக் கவர்ந்துவிட்டான்.

சாவித்திரி திரும்பி வந்ததும் அவள் தந்தை அவளைப் பார்த்து, ''என் அருமை மகளே! சாவித்திரி! நீ மணம் செய்து கொள்ள விரும்பும் யாரையாவது கண்டாயா, சொல்'' என்று கேட்டார். நாணிக்கொண்டே, சாவித்திரி மெல்ல, ''ஆம், தந்தையே'' என்று சொன்னாள்.


''அந்த அரச குமாரனின் பெயர் என்ன''

''அவர் அரசகுமாரன் அல்ல, அவர் அரசை இழந்துவிட்ட துயமத்சேனனின் மகன். அவருக்குத் தந்தை வழிச் சொத்துரிமை ஏதும் இல்லை. அவர் ஒரு குடிசையில் ஒரு துறவி போன்று வாழ்க்கை நடத்துகிறார். கிழங்குகளையும், இலைகளையும் சேகரித்து, வயதான பெற்றோர்களைக் காப்பாற்றுகிறார்'' என்று சொன்னாள்.

இதைக் கேட்ட அரசன் அந்தச் சமயத்தில் அங்கிருந்த நாரதரிடம் இது பற்றி கலந்து பேசினார்.

நாரதர், ''இன்றிலிருந்து பன்னிரண்டு மாதங்களில் சத்தியவான் இறந்து போவான்'' என்று கூறினார்.

இதைக் கேட்டு அரசன் நடுங்கினான். ''சாவித்திரி! அந்த இளைஞன் இன்னும் பன்



னிரண்டு மாதங்களில் இறக்கப்போகிறான். நீ விதவையாகிவிடுவாய். அதை நினைத்துப் பார். இந்த இளைஞன் வேண்டாம். நீ அற்ப ஆயுளுள்ள இந்த இளைஞனை மணக்க நான் ஒரு போதும் சம்மதிக்க மாட்டேன்'' எஃறான்.

''இதைப் பற்றி கவலைப்படாதீர்கள் அப்பா! வேறு யாரையாவது மணம் புரிந்து கொள்ளச் சொல்லி என் கற்புக்கு மாசு ஏற்படுத்தாதீர்கள். ஏனெனில் நான் அந்த வீர சத்தியவானைத்தான் காதலிக்கிறேன். அவரை என் மனத்தில் கணவனாக வரித்து விட்டேன். பெண்ணானவள் ஒரு முறைதான் கணவனைத் தேர்ந்தெடுப்பாள். பிறகு அதிலிருந்து மாறவே மாட்டாள்'' என்று சொன்னாள்.

சாவித்திரியின் மன உறுதியைக் கண்டு அரசன் திருமணத்திற்குச் சம்மதித்தான். சாவித்திரிக்கும் சத்தியவானுக்கும் திருமணம் நடந்தது; அவள் தன் அரண்மனையைவிட்டுக் காட்டிற்குச் சென்று, கணவனுடன் வாழ்ந்தாள்; அவனுடைய பெற்றோர்களுக்குத் தொண்டு செய்து வந்தாள்.

சத்தியவான் என்றைக்கு இறப்பான்என்று சாவித்திரிக்குத் தெரிந்த போதும் அதை அவள் அவனிடம் சொல்லவில்லை. தினமும் அவன் காட்டுக்குச் சென்று பழங்களும் மலர்களும் விறகும் சேகரித்துக் கொண்டு திரும்புவான். சாவித்திரி சமையல் செய்வாள். அந்த முதியவர்களுக்கு உதவி புரிவாள்.

வாழ்க்கை இப்படியே செல்ல, அந்த இறுதி நாளுக்கு இன்னும் மூன்று நாட்களே இருந்தன. அந்த மூன்று நாட்களும் உணவும் உறக்கமும் இன்றி இருக்கும் ஒரு விரதத்தை சாவித்திரி மேற்கொண்டாள். இறுதி நாள் இரவு. இரவெல்லாம் உறங்காமல் அழுது கொண்டே பிரார்த்தனைகள் செய்தாள்.

அந்த இறுதி நாள்பொழுது விடிந்தது. அன்று ஒரு கணம்கூடக் கணவனைவிட்டுப் பிரியக் கூடாது என்று தீர்மானித்தாள். விறகு வெட்டச் செல்லும் கணவனுடன் செல்லத் தன்னையும் அனுமதிக்கும்படி அவனுடைய பெற்றோர்களிடம் அனுமதி பெற்று அவளும் உடன் சென்றாள்.

காட்டிற்குச் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் தனக்கு மயககமாக இருப்பதாக சத்தியவான் தழுதழுத்த குரலில் சொன்னான். ''என் கண்ணே சாவித்திரி! தலை சுற்றுகிறது. என் புலன்கள் தடுமாறுகின்றன. எனக்குத் தூக்கம்

வருகிறது. நான் உன் பக்கத்தில் சற்று இளைப்பாறுகிறேன்'' என்று சொன்னான்.

சாவித்திரி பயந்து நடுங்கிக்கொண்டே, ''என் ஆருயிர்த் தலைவரே! உங்கள் தலையை என் மடியின்மீது வைத்துக்கொண்டு படுங்கள்'' என்று சொன்னாள்.

மனைவியின் மடியில் தலை வைத்துப் படுத்த சத்தியவான் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டு, உயிர் துறந்தான். அந்தத் தனிக்காட்டில் கண்களில் நீர் மல்க, அவள் தன் கணவனைக் கட்டிப்பிடித்தபடியே இருந்தாள்.

அவனது உயிரை எடுத்துச் செல்ல எமதூதர்கள் அங்கு வந்தார்கள். ஆனால் சாவித்திரி தன் கணவன் உடலை மடியில் வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்த இடத்தை அவர்களால் நெருங்கவே முடியவில்லை. அவளைச் சுற்றி அனல் சூழ்ந்திருந்தது. எமதூதர்கள் மரண தெய்வமான எமனிடம் திரும்பிச் சென்று சத்தியவானின் உயிரைக் கவர முடியவில்லை என்று சொன்னார்கள்.

பிறகு, இறந்தவர்களுக்கு நீதி வழங்கும் மரணக் கடவுளான எமனே அங்கு வந்தான். பூமியில் இறந்த முதல் மனிதன் அவன். அவன்தான் மரணக் கடவுளானான். இறந்த பிறகு ஒரு மனிதனைத் தண்டிக்க வேண்டுமா, அல்லது அவனுக்கு வெகுமதி அளிக்க வேண்டுமா என்பதைத் தீர்மானிப்பவன் எமன். ஆகவே அவனே அங்கு வந்தான். அவன் கடவுளாததலால் அந்த அக்கினி வட்டத்தைத் தாண்டி அவனால் உள்ளே நுழைய முடிந்தது.

சாவித்திரியைப் பார்த்து, ''மகளே! இந்த இறந்த உடலை விட்டுவிடு. எல்லா மனிதர்களுக்கும் சாவு உண்டு. முதன் முதலில் செத்த மனிதன் நான். அதற்குப் பிறகு எல்லோரும் சாகத்தான் வேண்டும். மரணமே இறுதி முடிவு'' என்றான்.

இதைக் கேட்டுச் சாவித்திரி விலகிச் சென்றாள். எமன் உடலிலிருந்து உயிரைப் பிரித்தான். அந்த இளைஞனின் உயிரை எடுத்துக்கொண்டு அவன் தன் வழியே செல்ல ஆரம்பித்தான். சிறிது நேரத்திற்கெல்லாம், அவன் காய்ந்த சருகுகளின் மீது காலடி சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான்!.

''என் மகளே, சாவித்திரி ஏன் என்னைப் பின் தொடர்கிறாய்? எல்லா மனிதர்களுக்கும் இதே கதிதான்'' என்றான் எமன்.

சாவித்திரி சொனனாள், ''தந்தையே! நான் தங்களைப் பின் தொடரவில்லை. ஒரு பெண்ணின் கதி இதுதானே, அவள் தன் கணவனைப் பின்தொடர வேண்டுமென்பது; ஒரு அன்புக் கணவனையும், அவனுடைய அன்பு மனைவியையும் சனாதன தர்மம் பிரிக்கவில்லையே!'' என்றாள்.

''கற்புநெறி தவறா மகளே! உனக்கு நான் ஒரு வரம் தர விரும்புகிறேன். உன் கணவன் அல்லாத எதுவும் கேள். தருகிறேன். என்னைப் பின்தொடராதே'' என்றான் எமன்.

''தாங்கள் வரம் தருவதானால் என் மாமனார் கண்பார்வைபெற்று மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்று அருள்புரியுங்கள். மரண தேவரே!'' என்றாள் அவள்.

''கடமை தவறா மகளே! உன் விருப்பப்படியே ஆகுக'' மரணதேவன் சத்தியவானின் உயிரை எடுத்துக் கொண்டு தொடர்ந்துமேலே சென்றான். திரும்பவும் காலடிச் சத்தம் கேட்கத் திரும்பிப் பார்த்தான்.

''ஏன் மகளே சாவித்திரி! ஏன் என்னை இன்னும் பின் தொடர்கிறாய்?''

''ஆம், தந்தையே! நான் என்ன செய்வேன். நான் திரும்பிப் போகவேண்டுமென்றுதான் பார்க்கிறேன். ஆனால் என மனமோ என் கணவன் பின்னால் செல்கிறது. உடலோ உடன் வருகிறது. என் உயிர் முன்னாலேயே போய்விட்டது. ஏனெனில் அந்த உயிரால்தான் என் உயிர் இருக்கிறது. உயிர் சென்றால், உடலும் கூடச் செல்லத்தானே வேண்டும்?'' என்றாள்.

''அழகிய சாவித்திரி! உன் வார்த்தைகளைக் கேட்டு மகிழ்ந்தேன். வேறு ஒரு வரம் கேள், ஆனால் அது உன் கணவன் உயிராக இருக்கக்கூடாது,'' என்றான் எமன்.

''தந்தையே! தாங்கள் எனக்கு இன்னொரு வரம் தருவதானால் என் மாமனார் மீண்டும், இழந்த அரசையும் செல்வத்தையும் பெற அருள்புரியுங்கள்'' என்றாள்.

''அன்புள்ள மகளே! நீ கேட்ட வரத்தைக் கொடுத்தேன். வீடு திரும்பு, ஏனெனில் மனிதர்கள் எமதேவனுடன் செல்ல முடியாது'' என்றான்.

எமன் தொடர்ந்து மேலே சென்றான். பணிவும் அன்பும் நிறைந்த சாவித்திரி தன் கணவனைப் பின் தொடர்ந்தாள்.

''எமன் திரும்பிப் பார்த்து, ''நற்குணம் வாய்ந்த சாவித்திரி! தீராத்துயர் கொண்டு என்னைத் தொடராதே!'' என்றான்.

''என் ஆருயிர்க் கணவனைத் தாங்கள் எடுத்துச் செல்கிறீர்களே, அங்குச் செல்வதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை.''

''உன் கணவன் ஒரு பாவி என்று வைத்துக் கொ.ள். அவன் நரகம் செல்ல நேர்ந்தால் அப்பொழுது நீ அங்கு வருவாயா?''

''வாழ்விலோ சாவிலோ, நரகமோ, சொர்க்கமோ அவரைப் பின் தொடர்வதுதான் எனக்கு மகிழ்ச்சி.''

''என் குழந்தாய்! உன் வார்த்தைகள் மங்களமானவை. உன்னை கண்டு நான் மகிழ்கிறேன். இன்னொரு வரம் கேள். ஆனால் செத்தவர்கள் உயிர் பிழைக்க மாட்டார்கள், ஞாபகம் வைத்துக் கொள்.''

''அப்படியானால் என் மாமனாரின் அரச மரபு அழியாமல் இருக்கட்டும். அவருடைய அரசு சத்தியவானின் மைந்தர்களுக்குச் செல்லட்டும்''.

இதனைக்கேட்டு எமதர்மன் புன்முறுவல் பூத்தான். ''என் மகளே! உன் விருப்பப்படியே ஆகுக! இதோ உன் கணவனுடைய ஆன்மா. அவன் மீண்டும் உயிர் பெற்றுத் திரும்புவான். உன் குழந்தைகள் அரசாள்வார்கள். வீடு திரும்பு. உன் அன்பு மரணத்தை வென்றுவிட்டது. உன்னைப்போல எந்தப் பெண்ணும் தன் கணவனைக் காதலிக்கவில்லை. உன் உண்மையான அன்பிற்கு முன்னால் மரணத்தேவனான நான்கூட ஆற்றல் அற்றவன் ஆகிவிட்டேன் என்பதற்கு நீ சான்று'' என்றான்.

இதுதான் சாவித்திரியின் கதை. இந்தியப் பெண்கள் எல்லோரும் சாவித்திரியைப் போல் விளங்க வேண்டும். மரணத்தால் கூட அவள் அன்பை வெற்றிக் கொள்ள முடியவில்லை. ஆற்றல் மிக்க சாவித்திரி தன் கணவனின் உயிரை எமனிடமிருந்து மீட்டாள்.


**—சுவாமி விவேகானந்தரின் 'மகாபாரதம்' நூலிலிருந்து இக்கதை எடுத்து வழங்கப்பட்டுள்ளது.**

## தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே!



**தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே'' என்றார் ஔவையார். திருத்தொண்டர் புராணம் பாடிய சேக்கிழார் பெருமானை யானைமேல் ஏற்றுவித்து அநபாயச் சோழன் இருகரங்களாலும் கவரி வீசிப் பெருமை செய்தான். சேக்கிழார் முத்தியடைந்த வைகாசிப் பூசம் இவ்வாண்டு 18.5.91 அன்று வருகிறது. சேக்கிழார் பெருமான் திருவடிகள் போற்றி போற்றி.**

# நீங்கா இளமை தந்த ஊடல்



அறநெறியண்ணல் கி. பழநியப்பனார்

மனையாளுடன் வாழ்வது மனையறம். அதனை இல்லறம் என்றும் கூறுவர். அறம் என்று கூறப்படுவதற்கு உரிமையுடையது இல்வாழ்க்கையே என்பது வள்ளுவர் கருத்து.

'அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று (49)

அஃதும் என்பது இங்கு துறவறத்தைக் குறிப்பதாகும். இல்லாள் இல்லையாயின் இல்லறம் இல்லை. ஆகவே இல்லாளின் மாண்பே இல்லறத்தின் மாண்பாகும். ஒருவன் வாழ்க்கைக்கு நல்லதுணை மனைவியேயாகும். அது கருதியே வள்ளுவர் மனையாள் நலத்தைக் கூறும் அதிகாரத்தை வாழ்க்கைத் துணைநலம் என்று குறிப்பிடுகிறார்.

தமிழகத்தில் நாயன்மார்கள் காலத்தில் இல்லறம் எவ்வாறு நடைபெற்றது என்பதைப் பெரியபுராணம் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளது. சிறிது சிந்தனையை அதில் செலுத்துவோர் வாழ்க்கை சிறக்கும் என்பது உறுதி.

திருநீலகண்ட நாயனார் தில்லையில் வாழ்ந்தவர். மட்கலங்கள் செய்வது அவர் தொழில். பொய் கடிந்து அறத்தின் வழிநின்று வாழ்ந்தவர். திருநீலகண்டராகிய சிவபெருமானிடம் தீராத அன்புடையவர். சிவனடியார்களுக்குத் திருவோடு அளிப்பதைச் சிவத்தொண்டாகக் கொண்டவர். இளம் வயதினர், அவர் திருமகளுக்கு ஒப்பான மனையாளுடன் வையகம் போற்றும் மனையறம் புரிந்து வாழ்ந்தார். ஒருநாள், இளமையின் காரணமாகச் சிற்றின்பத்தில் வேட்கைபுகுந்து, பரத்தை ஒருவளை நாடிச் சென்றார்.

அருந்ததியின் கற்பின் மிக்காராகிய அவர் மனைவி இதை அறிந்தனர். அந்நிலையில் தம் கடமை என்ன என்பதை ஆழ்ந்து சிந்தித்தார்.

'கற்பெனப்படுவது சொற்றிறம் பாமை' என்பது முதுமொழி. இல்லறத் தலைவியின் மாட்சிகள் இவையென்று தொல்காப்பியர் தொகுத்துக் கூறியுள்ளார்.

'கற்பும், காமமும், நற்பால்ஒழுக்கமும்
மெல்லியல் பொறையும், நிறையும், வல்லிதின்
விருந்து புறந்தருதலும், சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்''

(கற்பியல்-11)

தொல்காப்பியர் இதில் கற்புக்கு முதல் இடம் கொடுத்துள்ளார். திருக்குறளில் திருவள்ளுவர் கற்பு எனும் சொல்லை ஒரே ஓர் இடத்தில் தான் பயன்படுத்தியுள்ளார்.

'பெண்ணின் பெருந்தக்க யாவுளகற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின்'(54)

இவற்றையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்தார் திருநீலகண்டரின் வாழ்க்கைத் துணைவியார். கணவனிடம் குற்றங் காணுதல் கற்பிற்கு இழுக்காகுமோ என்று சிறிது ஐயமுற்றார். முடிவில் இழுக்கல்ல எனத் தெளிந்தார்.

''தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்''. (56)

எனும் திருவள்ளுவரின் உறுதிமொழியே அவருக்கு அத்துணிவைக் கொடுத்தது.

''தகைசான்ற சொற்காத்து'' என்பதற்குப் பரிமேலழகர் கொடுக்கும் விளக்கம் - தமிழர் மரபினைத் தழுவியதாகும். ''கணவன் மனைவி இருவர் மாட்டும் நன்மையமைந்த புகழ் நீங்காமல் காத்து'' என்பதே அவர் விளக்கம்.





திருநீலகண்டர் செயல் புகழைக் கொடுப்பதல்ல; இழிவைக் கொடுப்பதேயாகும். கணவனின் இச்செயலைத் தடுக்க வேண்டும். எவ்வாறு தடுப்பது? தம் எதிர்ப்பைத் தெரிவிக்க ஊடலே தக்கதெனக் கொண்டாள்.

கற்புடைய பெண்களின் குணங்களைக் கூறவந்த தொல்காப்பியர்;

''——சிறப்பிற் கற்பில் திரியாமைக்
காய்தலும், உவத்தலும், பிரித்தலும்,
பெட்டலும்'' (கற்பியல் 1091)

ஆகிய குணங்களையும் பெற்றிருக்க வேண்டும் என்கிறார்.

அம்மையார் ஊடல் கொண்டார். உடல் உறவுக்கு இசைய மறுத்தார்.

ஆனதங் கேள்வர் அங்கோர்
பரத்தையால் அணைந்து நண்ண
மானமுன் பொறாது வந்த
ஊடலால் மனையின் வாழ்க்கை
ஏனைய எல்லாம் செய்தே
உடனுறைவு இசையார் ஆனார்;
தேனலர் கமலப் போதில்
திருவினும் உருவம் மிக்கார்''

(பெரியபுராணம்)

உடல் உறவை மறுத்த போதிலும், திருமகளினும் மிக்க அழகுடைய அம்மையார் ஒரு மனைவிக்குரிய பணிகளாகிய தற்கொண்டான்பேணல் முதலிய மனைத்தக்க மாண்புகளைச் சிறிதும் சோர்விலாது செய்து வந்தாள். ஊடல், தலைவன் தலைவிக்கு உவப்பைக் கொடுப்பது என்று வள்ளுவர் ''ஊடலுவகை'' என ஓர் அதிகாரமேவைத்துள்ளார். வள்ளுவர் குறிப்பிடும் ஊடலுக்கும், திருநீலகண்டருக்கும் அவர் மனைவிக்கும் இடையே தோன்றிய உடலுக்கும் வேறுபாடு உண்டு. தலைவன் தலைவிக்கும் இடையே தோன்றிடும் ஊடல் தலைவனிடம் தோன்றிடும் ஒரு குற்றத்தை பெரிதாகக் கற்பனை செய்து கொண்டு அதன் பொருட்டுச் சினம் கொள்வது போன்று நடித்தலே வள்ளுவர் கூறும் ஊடல்.

ஆனால் திருநீலகண்டரின் மனைவி ஊடல் கொண்டமைக்குக் காரணம் கணவரின் உண்மையான இழிச்செயல் ஒன்றினை நீக்குவதற்கேயாகும். ஆகையால் இவ்வூடல் உவகைக்கு முன்னோடியல்ல.

திருநீலகண்டர் தம் குற்றத்தை உணர்ந்தார். மனைவியை அன்புடன் வேண்டின் அவள் ஊடல் மாறும் என்று நம்பினார்.

இந்நிலையில் ஒருவன் தான் தலைவன் என்பதைக் கருதாது மனையாளை இரந்து வேண்டுதல் இயல்பு என்கிறார் தொல்காப்பியர்.

'மனைவி உயர்வும் கிழவோன்பணிவும்
நினையும் காலைப் புலவியுள் உரிய'
(பொருள்-223).

அருந்ததியின் கற்பின் மிக்க மனைவியைத் திருநீலகண்டர் இரந்து வேண்டி மெய்யுற அணைய நெருங்கினார்.

மனவேதனை மிகுந்திருந்த நிலையில் கணவர் செயலைத் தடுக்க வழிகாணாது, திருநீலகண்டத்தான் பெயரால் ஆணையிட்டு ''எம்மைத் தீண்டாதீர்'' என்றார் அம்மையார்.

''மூண்ட அப் புலவி தீர்க்க
அன்பனார் முன்பு சென்று
பூண்டயங் கிளமென் சாயல்
பொற்கொடி அனையார் தம்மை
வேண்டுவ இரந்து கூறி
மெய்யுற அணையும் போதில்
''தீண்டு வீராயின் எம்மைத்
திருநீல கண்டம்'' என்றார்.

(பெரியபுராணம்).

அச்சொற்களைச் செவியுற்ற திருநீலகண்டர் அக்கணமே செயலற்று நின்றுவிட்டார். தாம் நாளும் வாழ்த்தி வழிபடும் இறைவன் பெயரால் இட்ட ஆணை அவருக்கு மெய்யுணர்வினைக் கொடுத்தது. கற்புறு மனைவியின் வாக்கைத் தெய்வவாக்காகக் கொண்டார். 'எம்மைத் தீண்டாதீர்' என்று பன்மையில் கூறியதால் இனி ஒருநாளும் பெண் இனத்தைச் சேர்ந்தவர்களைத் தீண்டேன் என்று சூளுரைத்தார்.

அந்நொடியே தம் காதல் மனைவியை ஓர் அன்னியரைப் பார்ப்பதுபோல் நோக்கினார். ''எம்மை'' என்றதால் மற்ற மாதரார் தமையும் என் மனத்திலும் தீண்டேன்'' என்றார். இச்செயலால் புனற்சடை முடியர்க்கு அன்பராயிருந்த நாயனார், தொண்டர்களில் 'பெரியவர்' ஆகிவிட்டார் என்று கருதினார் சேக்கிழார்.

'ஆதியார் நீலகண்டத் தளவு தாங்கொண்ட ஆர்வம் பேதியா ஆணைகேட்ட பெரியவர்'' என்கிறார்.

அம்மையார் அவ்வாறு ஆணையிட்டது தகுமோ? அதற்கு நாயனார் இவ்வளவு தீவிர சபதம் எடுத்திருக்க வேண்டுமோ? என்பன சிந்தனைக்குரியனவாம்.

தலைமகன் ஒருவன் பரத்தையரை நாடிச் செல்வது ஒரு பெரிய குற்றமாகத் தொல்காப்பியர்காலத்தில் கருதியாகத் தெரியவில்லை. அதனை அறிந்த கற்புடைத்தலைவி, வெளிப்படையாகப் பரத்தையைப் புகழ்ந்தும் உள்ளத்தில் மட்டும் ஊடல் கொள்வதும் உண்டு என்கிறார் தொல்காப்பியர்.

''கற்புவழிப் பட்டவள் பரத்தையேத்தினும்
உள்ளத்து ஊடல் உண்டென மொழிப''
(பொருளியல்)

திருவள்ளுவர் காலத்தில் பரத்தையர் வரைவின் மகளிராகக் கொள்ளப்பட்டனர். பரத்தையர் பால் பெறும் இன்பம் இருட்டறைக் கண் ஒரு பிணத்தைத் தழுவிப்பெறும் இன்பத்திற்கு ஒப்பாகும் என்கிறார் வள்ளுவர்.

''பொருட் பெண்டிர் பொய்ம்மை முயக்கம்
இருட்டறையில்
ஏதில் பிணந்தழீஇ அற்று (913)

பொய்கடிந்து அறவழி வாழ்ந்து அருள்நாடி நிற்கும் தம் கணவர் ஒழுக்கம் தவறிப் படுகுழியில் வீழ்வதைக் கண்ட அம்மையார், தம் மனம் பொறாது ''திருநீலகண்டம்'' என்று ஆணையிட்டார். அவ் ஆணையின் பின் விளைவை எண்ணுவதற்கு நேரம் இல்லை. தூய்மையற்ற நிலையில் தம் தூய உடலைக் கணவன் தீண்ட நெருங்கி வருகிறார். அதைத் தடுப்பதற்கு ஆணையிடுவது தவிர அவருக்கு வேறு வழியில்லை என்பதால் அம்மையார் செயலில் குற்றம் காணுதல் பொருந்தாது.

இறைவன் பெயரால் இட்ட ஆணை நாயனார் உள்ளத்தைப் பெரிதும் தாக்கிற்று. பழி நாணினார். ''எம்மைத் தீண்டாதீர்'' என்று பன்மையில் கூறியதும் திருவருட் செயலே எனக்கொண்டார். உடம்பால் மட்டுமன்று மனத்தாலும் எம்மாதரையும் தீண்டேன் என்று தீவிர சபதம் எடுத்துக்கொண்டார். அந்நொடியே சற்றுமுன்வரைத்தாம் அணைவதற்குரியவளாக இருந்த மனைவியை ஏதிலார் போல் நோக்கினார்.

கணவரும் மனைவியும் தங்கள் இளமை குன்றாத வயதில் இவ்வாறு சபதம் எடுத்துக் கொண்டனர். புலனடக்கத்துடன் தங்கள் ஊடலும் சபதமும் பிறர் அறியாது வாழ்ந்தனர். ஒருநாளல்ல சிலகாலமல்ல, அவர்கள் இளமை நீங்கி மூப்பெய்தித் தளர்ச்சியடைந்தும் சபதத்தை மீறிலர். அதனைப் பிறர் அறியும்படி ஏதும் செய்யாது இல்லறம் நடத்தினர்.

''கற்புறுமனைவியாரும்
கணவனார்க் கான எல்லாம்
பொற்புற மெய்யு றாமல்
பொருந்துவ போற்றிச் செய்ய
இற்புறம் பொழியா தங்கண்
இருவரும் வேறு வைகி
அற்புறு புணர்ச்சி இன்மை
அயலறியாமை வாழ்ந்தார்''.

பிரிந்து சென்று வெவ்வேறாக வாழாது தங்கள் வீட்டிலேயே இருவரும் வாழ்ந்து வந்தனர்.

இவர்கள் வாழ்ந்த சீரிய வாழ்வே நன்னெறி என்பதை உலகறியச் செய்ய இறைவன்

திருவுள்ளங்கொண்டார். ஒரு சிவயோகியாராகத் திருநீலகண்டரிடம் வந்தார். ஒரு பழைய திருவோட்டினைக் கொடுத்து அதைப் பத்திரமாக வைத்திருந்து தாம் வந்து கேட்கும் பொழுது கொடு என்று நாயனாரிடம் கூறினார்.

நாயனாரும் வணங்கி ஓட்டினை வாங்கி அதைப் பாதுகாப்பான ஓர் இடத்தில் வைத்திருந்தார். சிறிதுகாலம் சென்று சிவயோகியார் வந்து ஓட்டினைக் கேட்டார். வைத்த இடத்தில் ஓடு காணப்படவில்லை. யோகியாக வந்த இறைவனே அதை மறைத்துவிட்டார். ஓடு வைத்த இடத்தில் காணப்படாததைக் கூறி வேறு புது ஓடு தருவதாக நாயனார் கூறினார். சிவயோகியார் அதனை ஏற்காது தாம் கொடுத்த ஓடே வேண்டும், ''அது மாயமாக மறைந்தது என்பது உண்மையானால் நீ உன் மகன் கையைப் பிடித்துக் கொண்டு குளத்தில் மூழ்கிக் கூறு'' என்றார்.

நாயனார் தனக்குப் புத்திரப் பேறு இல்லையென்று கூற, யோகியார் 'உன் மனையாளின் கையைப் பிடித்து மூழ்குக'' என்றார். தங்கள் சபதத்தை எண்ணி நாயனார் அவ்வாறு செய்ய இயலாது என்று மறுத்துவிட்டார். வழக்கு தில்லைவாழ் அந்தணர் அவைக்கு வந்தது. யோகியார் விருப்பப்படி மனைவியின் கரத்தைப் பிடித்துக்கொண்டு மூழ்க வேண்டியது தான் நியாயமென்று தீர்ப்புக் கூறப் பெற்றது. தீர்ப்பை மீறமுடியாத இந்நிலையில் கூட நாயனார் தம் சபதத்தை வெளிப்படுத்தவில்லை.

பொருத்தமான முறையில் மூழ்குவதாகச் சொல்லி மனைவியுடன் குளக்கரைக்குவந்தார். முதுமைக்குத் துணையான தம் ஊன்று கோலுடன் நீரில் இறங்கி அக்கோலின் மறுமுனையை மனைவியைப் பற்றச் செய்து மூழ்க முயன்றார். சிவயோகியார் அதனை மறுத்துக் கையைப் பிடித்தே இருவரும் மூழ்க வேண்டுமென்று கூவினார். அந்நிலையில்தான் நாயனார் உலகறிய தம் சபதத்தால் கையைப் பிடித்து மூழ்காமைக்குக் காரணத்தை விளக்கித் தண்டைப் பிடித்தே மனைவியுடன் மூழ்கினார்.

''தண்டிரு தலையும் பற்றிப்
புகும்அவர் தம்மை நோக்கி
வெண்திருநீற்று முண்ட
வேதியர் ''மாதைத் தீண்டிக்
கொண்டுடன் மூழ்கீர்'' என்னக்
கூடாமை பாரோர் கேட்கப்
பண்டுதம் செய்கை சொல்லி
மூழ்கினார் பழதிலாதார்''

நாயனாரும் துணைவியாரும் வயது முதிர்ந்த கிழவனும் கிழவியுமாக நீரில் மூழ்கி, எழுந்தபொழுது இருவரும் இளம் வயதினராகக் காணப்பெற்றனர். சிவபெருமான் உமையுடன் விடைமேல் தோன்றி,

''வென்ற ஐம்புலனால் மிக்கீர்! விருப்புடன் இருக்க நம்பால் என்றும் இவ்இளமை நீங்காது'' என்று அருளினார்.

இவ்வாறு பொய்கடிந்து அறத்தின் வாழ்ந்த திருநீலகண்டரும், அருந்ததிக் கற்பின் மிக்க அவர் துணைவியாரும் நடாத்திய மாண்புறு மனையறத்தின் வாயிலாக நாம் அறிந்துகொள்ளவேண்டியன:

1. கணவன் தீநெறியில் செல்வானாயின் அதனை ஏற்றமுறையில் தடுத்து, நன்னெறியில் செலுத்தவேண்டியது ஒரு நல்ல மனைவியின் கடமையாகும்.

2. அம்முயற்சியில் துன்பம் நேரினும் ஏற்றுக்கொள்ளும் துணிவுவேண்டும்.

3. கணவன் மனைவிக்கு இடையே தோன்றும் மனத்தாங்கல்களை அயலார் அறியும்படி நடந்துகொள்ளக்கூடாது.

4. தாம் செய்யும் தொழில் எதுவாயினும் அதன்மூலம் இயன்ற அளவு மெய்யடியார்களுக்கு உதவுதல் வேண்டும்.

5. நேர்மையான ஒரு சபதம் மேற்கொண்டால் எக்காரணத்தாலும் எந்நிலையிலும் அதனைக் கைவிடல் ஆகாது.

6. குன்றாத இறைபக்தியுள்ளோர்க்கு சில சமயம் இடர்வரினும் இறுதியில் நிறைவு பெறுவர்.

## இறைவனே துணை

**தந்தை நீ, தாய் நீ**
**சுற்றம் நீ, உறவு நீ**
**நீயல்லாது வேறு யாருமில்லை ஐயா**
**கூடல சங்கம தேவா !**
**பாலில் ஆழ்த்துவாய் நீரில் ஆழ்த்துவாய்**
**பாலில் ஆழ்த்தினும் நீரில் ஆழ்த்தினும்**
**நீயே துணை கூடல சங்கம தேவா !**

—மகான் பசவர்

# திருமுருகன்



# திருவருள்

புலவர் **ச. சோமசுந்தரம்,** எம்.ஏ.,எம்.எட்.,

''சீர்கொண்ட தெய்வ வதனங்கள் ஆறும் திகழ்கடப்பம்
தார்கொண்ட பன்னிரு தோள்களும் தாமரை தாள்களுமோர்
கூர்கொண்ட வேலும் மயிலும் நற்கோழிக் கொடியுமருட்
கார்கொண்ட வண்மைத் தணிகா சலமும்என் கண்ணுற்றதே''

என வள்ளற் பெருமான், நிலைக் கண்ணாடியைச் சுவரில் வைத்து அதன் எதிரில் அமர்ந்து தியானம் செய்த போது கண்ணாடியில் (கண்-நாடியில்-புருவமத்தியில்) கண்குளிர முருகன் காட்சித் தந்ததைக் கண்ணாரக் கண்டு பண்ணாரப் பாடினார்.

வண்டி யிரு சுடராக, வையம் தேராக, நாலு மறையும் மாவாக (குதிரையாக), வானவர்கள் அனைவரும் பரிவாரமாக, மலர்வாழ் பவன் பாகனாகக் கொண்டு மலை சிலையாக அரவு நாணாக, மால் கோலாக, அழலாக வாய், கோல் இறகு நாலாக வெந்து முப்புரம் எரி கொளுந்த வெய்தவர்-முக்கண்ணுறு சிவனார் தம் குமாரனாகிய திருமுருகனுக்கு குமரன், குகன், குருபரன், கார்த்திகேயன், ஆறுமுகன், சுப்ரமணியன், சுவாமிநாதன் என எண்ணற்ற திருநாமங்கள் இருப்பினும் அவற்றுள் திருமுருகன் என்ற திருநாமமே சிறந்தது என்பர்.

தங்கத் தமிழ் வளர்த்த சங்கச் சான்றோர் நூல்களை மேல் கணக்கு நூல்கள் என்றும், கீழ்கணக்கு நூல்கள் என்றும் பிரித்தனர். அவற்றுள் பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும் மேல் கணக்கு நூல்கள். மேல் கணக்கு நூல்களில் முதல் நூலாக தெய்வ நூலாக திருமுருகாற்றுப்படையை அமைத்தனர். நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே யென நெஞ்சுறுதியோடு நவின்ற நக்கீரனார் தாம் இயற்றிய ஆற்றுப்படைக்குத் திருமுருகு ஆற்றுப்படை என்றே பெயர் சூட்டியதிலிருந்து முருகு என்ற சொல்லின் தனிப்பெருஞ் சிறப்பை உணரலாம். ''அரும்பெறல் மரபின் பெரும் பெயர் முருகா'' எனக் குறிப்பிடுவதைக் காணலாம்.

திருமுருகப் பெருமான் சரவணப் பொய்கையில் அவதரித்ததைப் பாடிய கச்சியப்ப சிவாச்சாரியார் கந்த புராணத்தில்

''அருவமும் உருவ மாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய''

எனப் பாடுகின்றார். பல்வேறு புனிதத் திருநாமங்கள் எண்ணிறந்தன விருப்பினும் முருகன் என்ற சொல்லைக் கையாள்வதன் நுட்பம் ஆய்வுக் குரியதே யாகும்.

கிளியாய் இருந்து மொழியாய் நவின்று நல்வழியாய் அமைத்துக் கொடுத்த கந்தர் அனுபூதியில்

''முருகன் குமரன் குகன் என்று மொழிந்து
உருகும் செயல்தந்து உணர்வென்று அருள்வாய்''

என முருகன் என்ற திருநாமத்திற்கு முதன்மை தருகின்றார். ''சிறப்புடை பொருளை முந்துறக் கிளத்தல்'' என்பது நன்னூல்.

''ஊனினை யுருக்கிடும் முருகா வெனும் நாமம்
தேனினைச் சொரிந்திடும் முருகாவெனும்நாமம்
ஊழ்வினை களைந்திடும் முருகாவெனும் நாமம்
வாழ்பதம் அளித்திடும் முருகாவெனும்நாமம்''

எனச் சான்றோர் பாடுவர்.

அருணைமா முனிவர் தாம் பாடிய கந்தரலங்காரத்தில், நமது கண்களுக்குத் துணை முருகனது மென்மலர் பாதங்களைக் கண்டு களிப்பதே யென்றும், மெய்ம்மைக் குன்றா மொழிக்குத் துணை முருகா எனும் நாமங்களே என்றும்

முற்பிறவியில் செய்த பாவங்களை நீக்குதற்குத் துணை முருகனுடைய பன்னிரு தோள்களே யென்றும் அஞ்சத் தக்கத் தனிவழிக்குத் துணை வடிவேலும் மயிலுமே என்றும் பாடுகிறார்.

''விழிக்குத் துணைதிரு மென்மலர் பாதங்கள்
மெய்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனும் நாமங்கள்
முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும்
பயந்ததனி
வழிக்குத் துணை வடிவேலும் செங் கோடன்
மயூரமுமே!''

இப்பாடலில் முருகாவெனும் நாமங்கள் என்று குறிப்பிட்டுள்ளதை ஆய்ந்தறிதல் வேண்டும். முருகன் என்னும் ஒருமைக்கேற்ப நாமம் என்றமைக்காமல் நாமங்கள் என்றமைத்ததின் நுட்பத்தை யாய்தல் வேண்டும். எல்லா நாமங்களிலும் சிறந்தது முருகா என்னும் நாமம், அன்றியும் பல நாமங்களின் பொருள்கள் இந்த முருகன் என்ற நாமத்திற்கு உண்டு. வடமொழியில் மகாவாக்யம் என்ற உயர்ச்சியுடைய சொல் போல தமிழில் முருகா என்பது மகாவாக்கியமாகும். ''பெரும்பெயர் முருகா'' என்றார் நக்கீரர்.

அருணை மாமுனிவரும்

''முருகா என ஓர்தரம் ஓதும் அடியார்
முடிமேல் இணைத்தாள் அருள்வோனே''-
என்றும்
''ஆதிவிதியோடு பிறழாத வகை தேடியெனது
ஆவிதனையே குறுகி வருபோது
ஆதி முருகா! ஆதி முருகா! ஆதிமுருகா!
ஆதிமுருகா நினைவு தருவாயே''. [எனவும்

என்றும் பாடுகிறார். ''படிக்கின்றிலை பழனித் திருநாமம் படிப்பவர்தாள் முடிக்கின்றிலை முருகா என்கிலை'' எனக் கந்தர் அலங்காரம் பாடுகின்றது.

''அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரம் தோன்றில் வேல் தோன்றும்-
நெஞ்சில்
ஒருக்கால் நினைக்கின் இருக்காலும் தோன்றும்
முருகா என் றோதுவார் முன்''-என்ற அருமை

வெண்பா பாடலையும் நோக்குக.

பிரணவ மந்திரமாகிய ஓம் என்ற எழுத்து அ உ ம் என்ற மூன்று எழுத்துக்களை உடையது. அதில் உகரம் காத்தற் தொழில் செய்ய வல்லது. அதனால்தான் தெய்வமாக் கவிஞர்கள் தம்முடைய நூல்களில் உகரத்தை முதல் எழுத்தாக வைத்துப் பாடினர்.

நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் முதலில் 'உலகம் உவப்ப' என்றும், சேக்கிழார் தாம் பாடிய பெரிய புராணத்தில் 'உலகெலாம்' என்றும் கவிச்சக்கரவர்த்தி கம்பர் 'உலகம் யாவையும்' என்றும் தொடங்குகின்றனர்.

முருகு என்றால் இளமை, அழகு, மணம், தெய்வத் தன்மை என்ற பொருள்படும். இதனை ''பண்டைத் தன் மணங்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி'' எனக் குறிக்கின்றார் நக்கீரர்.

மு,ரு,கு, என்ற சொல்லில் (ம்+உ,ர்+உ; க்+உ)மூன்று உகரங்கள் வருவதைக் காணலாம். எனவே இம்மையிலும் மறுமையிலும் சொர்க்கத்திலும் காப்பவன் முருகன் என்பதை யுணரலாம். தோலால் சுவர் எழுப்பிப்பத்து வாயுக்களினால் தாங்குவித்து, இரண்டு கால்களாகிய தூண் மேல் நிற்க செய்து, வளைந்த முதுகெலும்பாகிய மேல் முகட்டை யமைத்து இருகரங்களைத் தொங்கவிட்டு, நரம்புகளால் கட்டி மாமிசம் என்ற பூசு வேலையால் மூடிச் செய்த இந்த உடம்பாகிய வீட்டை விட்டு உயிர் பிரியுங்கால், வேற்படையால் கிரௌஞ்ச கிரியைத் தொளைத்த முருகக் கடவுளுடைய இரண்டு தாமரைத் தாள்களைத் தவிர புகலிடம் வேறில்லை யென்று அலங்காரத்தில் பாடுகின்றார்.

''கால்கொடுத்து இருகையேற்றிக் கழிநிரைத்
திறைச்சி மேய்ந்து
தோல்படுத்து உதிர நீரால் சுவரெடுத்து
இரண்டு வாசல்
ஏலவுடைத் தாவமைத்தங் கேழு சாலோகம்
பண்ணி
மால்கொடுத் தாவி வைத்தார் மாமறைக் காட
னாரே!''
என அப்பர் உரைப்பார்.

எனவே இவ்வுலகில் எத்தனையோ பிறப்பெடுத்து இறந்து இறந்து உழல்கின்றோம். ''செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள் எல்லாப்பிறப்பும் பிறந்து இளைத்தேன்'' என்பர் மணிவாசகர்.

வள்ளுவப் பெருந்தகை, இவ்வுலகிற்கு எதனால் பெருமை எனக் கேட்டு விடையும் அளிக்கின்றார்.

''நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை
யென்னும்
பெருமை யுடைத்துஇவ் வுலகு''-என்கிறார்.

எனவே நிலையற்ற உலகை நம்பாமல் நற்கதியைச் சாருதல் வேண்டும் என்பர் ஞானிகள்.

''ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன் அன்
புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன்
புத்தேளிர்
கோமான்நின் திருக்கோயில் தூகேன் மெழு
கேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே
சார்வேனே''
என்று மாணிக்கவாசகர் கதறுகின்றார்.

ஞானப்பால் உண்ட சம்பந்த பெருமானும்,

''நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளும் சாய்க்காட்டெம் பெருமாற்குப்
பூநாளும் தலைசுமப்பப் புகழ்நாமம் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்த பெறலாமே நல்வினையே!''

என்று இன்னிசையால் தமிழ் பாடினார்.

அருணை மாமுனிவரும்,

''கதிதனை யொன்றிறையும் காண்கின்றிலேன் கந்தவேள் முருகா
நதிதனையன்னபொய் வாழ்வில் அன்பாய் நரம்பால்பொதிந்த
பொதிதனை யும்கொண்டு திண்டாடு மாறெனைப் போதவிட்ட
விதிதனை நொந்து நொந்து இங்கே யென்தன் மனம் வேகின்றதே".

என்று பாடுகின்றார்.

எண்ணரிய பிறவிதனில் மானுடப் பிறவி தான் யாதினும் அரிது அரிது என்பர். ''இப் பிறவிதப்பினால் எப்பிறவி வாய்க்குமோ? யாது வருமோ?அறிகிலேன்'' என்கிறார் தாயுமானார்.

ஆதலால் நெஞ்சு கனக்கல்லு நெகிழ்ந் துருக இறைவனின் திருநாமத்தை இடைவிடாது அன்புடன் செபிக்க வேண்டும். தியானம் செய்தல் வேண்டும்.

திருமுருகனுடைய திருத்தாள் மலர்கள் கடினபாறையில் மலருமா? மலராது, எனவே இதயமாகிய பாறையை யுருக்கித் தெளிந்த அன்பெனும் நீரில் முருகனது தாமரைத் தாள்கள் மலரும். எனவே காதலால் கசிந்து கண்ணீர் மல்க அவனது திருநாமத்தை ஓதுதல் வேண்டும்; உருகுதல் வேண்டும்.

அரக்கினை உருக்கினால் தங்கம் உருகும். தங்கத்தையுருக்கினால் மாணிக்கக்கற்கள் பதியும். ஊன் உருகினால் உயிர் உருகும்; உயிர் உருகினால் இறைப்பதம் பதியும்.

திருமுருகன் திருவடியைச் சரணம் அடைந்தால் அவனருள் நிச்சயம் கிடைக்கும். ''நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே நிறைந்து நிறைந்து ஊற்றெழும் கண்ணீரதனால் உடம்பு நனைந்து நனைந்து அருளமுதே! நன்னிதியே! ஞான நடத்தரசே! என்னுரிமை நாயகனே! யென்று வனைந்து வனைந்து ஏத்துதும் நாம் வம்மின் உலகியலீர்'' என அழைக்கின்றார் வள்ளற் பெருமான்.

## கடவுளைக் காணும் வழி

**பணக்காரன் ஒருவனைக் காண**
**அவன் பணியாட்கள் தயவு வேண்டும்.**
**பரம்பொருள் இறைவனைக் காண**
**பற்றற்ற ஞானியர் உறவு வேண்டும்**

**—இராமகிருஷ்ண பரமஹம்சர்**

''மெய்தான் விதிர்விதிர்த்து விரையார் கழற்கு என்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் வெதும்பி ததும்பி
பொய்தான் தவிர்த்துச் செயசெய போற்றி யென்றென்
கைதான் நெகிழவிடேன் உடையாய் கண்டு கொள்ளே''

என வழிபாடு செய்யும் முறையை நவில்கின்றார்.

வழிபாடு செய்வதன் பயனைக் கீழ்வரும் பாடல் விளக்குகிறது.

''முடியாப் பிறவிக் கடலில் புகார் முழுதும் கெடுக்கும்
மிடியாம் படியில் விதனப் படார் வெற்றி வேற் பெருமாள்
அடியார்க்கு நல்ல பெருமாள் அவுணர் குல மடங்கப்
பொடியாக்கிய பெருமாள் திருநாமம் புகல் பவரே!''

இங்ஙனம் இடைவிடாது அன்பால் கண்ணீர் பெருக்கி வழிபட்டுத் திருமுருகன் திருவடியைச் சரணடைந்தால் இருவினைகள் மாயும், மும்மலங்கள் தீயும். பிறவித்தளை ஓயும், கரணங்கள் அடங்கும். மரணங்கள் ஒடுங்கும். ஆனந்தத் தேன் வாழ்வில் பொங்கும். இறை நிழலில் என்றும் இன்புறலாம்.

"வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட" என்பது திருமுருகாற்றுப்படை.

''ஆறிரு தடந்தோள் வாழ்க
அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க
யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
வாழ்க சீரடியார் எல்லாம்.''

# அரசாள்வார் ஆணை நமதே!



**மு. கிருட்டிணன்,** ஐ.ஏ.எஸ்., (ஓய்வு)

ஆளுடைய பிள்ளையார் என வழங்கப் படும் திருஞானசம்பந்தர் தேவையான பொருளையும் விரும்பிய அனைத்தையும் சிவபெருமானிடமே பாடல்களைப் பாடிப் பெற்றார்.

திருப்பாச்சிலாச்சிராமம் என்னும் நகரில் இருந்த அரசன் கொல்லிமழவன் இனிய மகளை முயலகன் என்னும் பெருநோய் டற்றிவருத்தினான். தலயாத்திரையின்போது இதை அறிந்த திருஞானசம்பந்தர் இறைவனைப் பணிந்து ''துணிவளர்'' என்று தொடங்கும் பதிகத்தைப் பாடி ''மணிவளர் கண்டரோ! மங்கையை வாட மயல் செய்வதோ? இவர் மாண்பு'' என்று முடித்து வணங்கினார். உடனே அப்பெண் பிணி நீங்கப்பெற்றாள்.

திருவாவடுதுறையில் தங்கி இருந்தபோது தமது தந்தையார் சிவபாத விருதயர் வேள்வி செய்வதற்குப் பெரும் பொருள்தரல் வேண்டும் என்று கோரினார். திருஞானசம்பந்தர் திருக்கோயிலின் உட்சென்று இறைவனைத்துதித்து ''இடரினும் தளரினும்'' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடினார். ஒவ்வொரு பாட்டிலும் ''இதுவோஎமையாளுமாறுஈவதொன்று எமக்கு இல்லையேல் அதுவோ உனது இன்னருள்'' என்று கூறிப்பாடினார். அவருடைய இச்சையின்படி இறைவன் திருவருளால் ஒரு சிவ பூதம் விரைந்து வந்து எடுக்க எடுக்க குறையாத ஆயிரம் பொன் கொண்ட உலவாக்கிழி ஒன்றை பலிபீடத்தின்மீது வைத்துச் சென்றது. அதை எடுத்துத் தந்தைக்கு அளித்தார்.

திருமருகலில் வணிகப் பெண்ணின் துயரத்தைக் கேட்டு அறிந்து பாம்பு தீண்டி இறந்து கிடந்த அவள் அத்தை மகனை உயிர்பெறச் செய்ய திருமருகல் பெருமானை நோக்கி ''சடையாய் எனுமால்'' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடினார். இவள் இவ்வாறு துன்பப்படுதல் உமக்குத் தகுதியாமோ என்று துதித்து ஒவ்வொரு பாட்டிலும் அவள் வேதனையை வெளிப்படுத்தினார். உடனே வணிகன் விடத்தீர்ந்து எழுந்தான். அவ்விருவருக்கும் மணம் செய்வித்து வாழ்த்தி அனுப்பிவைத்தார் திருஞானசம்பந்தர்.

திருவீழிமிழலையில் சிவனடியார்களுக்கு பசிநீங்க அமுது படைக்க இறைவன் திருஞானசம்பந்தருக்கும் திருநாவுக்கரசருக்கும் தினசரி தலா ஒரு பொற்காசு வழங்கினார். திருஞானசம்பந்தர் காசுக்கு வணிகர்கள் வட்டம் கேட்டனர். இதனை அறிந்த நம் ஞானசம்பந்தர் சிவபெருமானை வணங்கி ''வாசி தீரவே காசு நல்குவீர் மாசின் மிழலையீர் ஏசல் இல்லையே'' என்று திருப்பதிகம் பாடி நற்காசு பெற்றார்.

திருஆலவாயில் (மதுரையில்) கூன்பாண்டியனுடைய வெப்பு நோயைத் தீர்க்கத் திருஞானசம்பந்தர் திருநீறே மந்திரமும் மருந்துமாகித் தீர்ப்பதாகும் என்று நினைத்து ''மந்திரமாவது நீறு'' என்று தொடங்கும் பதிகத்தைப் பாடினார். திருநீற்றினையும் பாண்டியன் உடலின் வலது பக்கத்தில் பூசினார். உடனே வெப்பு நோய் நீங்கியது.

சமணர்களோடு அனல்வாதம் புரிய ஒப்புக்கொண்ட திருஞானசம்பந்தர் ''போகமார்த்த பூண் முலையாள்'' என்று தொடங்கும் திருநள்ளாற்றுப் பதிக ஏட்டை சிவபெருமான் திருநாமமே எப்பொழுதும் நிலைபெறும் மெய்ப்பொருளாம் என்பது யாவரும் அறியும் வண்ணம் ''இந்த ஏடு அக்கினியில் பழுதடையாது; இது சத்தியம்'' என்னும் கருத்துடைய ''தளிர் இளர்வளர் ஒளி''என்று தொடங்கும் திருப்பதிகம்பாடி தீயிலிட்டார். அந்த ஏடு வேகாமல் பசுமையாகவே இருந்தது.

இதேபோல் புனல் வாதத்திலும் திருஞானசம்பந்தர் வெற்றி பெற்றார். ''வாழ்க அந்தணர்'' என்று தொடங்கும் பதிகத்தை ஏட்டில் எழுதி வைகை ஆற்றில் இட்டார். நீரை எதிர்த்துக் கிழித்துக் கொண்டு மேல் நோக்கிச் சென்றது.

திருவோத்தூரில் சிவனடியார் வேண்டுக்கோளுக்கிணங்கி சிவபெருமானை வணங்கி ''பூத்தேர்ந்தாயன'' என்று தொடங்கும் பதி

**திருஞானசம்பந்தர் குருபூசை வைகாசி மூலம். அன்பர்கள் திருஞானசம்பந்தரை வணங்கி வாழ்வின் பயன்பெற வேண்டுகிறோம்.**

கம் பாடி ஆண் பனைகளை எல்லாம் காய்க் குலைகள் நிறைந்த பெண் பனைகளாக்கி திரு ஞானசம்பந்தர் சைவத்தின் பெருமையை நிலை நாட்டினார்.

திருமயிலையில் திருஞானசம்பந்தர் சிவ நேசர் கோரிக்கைபடி சிவபெருமானை வணங்கி ''மட்டிட்ட புன்னை'' என்று தொடங்கும் திருப்பதிகம்பாடி எலும்புகளைப் பூம்பாவாய் என்ற திருமகளை ஒத்த பெண்ணாக உலகர் முன் எழும்படிச் செய்தார்.

இவ்வாறு பல அற்புதச் செயல்களை இறைவன் திருவருளால் திருஞானசம்பந்தர் செய்து சைவத்தின் மேன்மையை நிலைபெறச் செய்தார். மேலும் அவர் பாடிய ஒவ்வொரு பதிகத்தையும் ஓதுகிறவர்கள் இன்ன இன்ன பயனை அடைவார்கள் என்று கூறியுள்ளார்.

திருஞானசம்பந்தர் ஐந்து பதிகங்களை ஓதுவதால் ஏற்படும் பயன்களை மட்டும் 'ஆணை நமதே' என்று தம்மேல் ஆணையிட்டுக் கூறியுள்ளார். அவை பற்றி இங்குச் சிந்திப்போம்.

(1) திருமறைக்காட்டில் திருஞானசம் பந்தரும் திருநாவுக்கரசரும் தங்கியிருந்தபோது மதுரையிலிருந்து வந்த அடியார்கள் மதுரையில் சமணமதம் மேலோங்கி இருப்பதை ஒடுக்கி சைவம் தழைக்கச் செய்ய வேண்டும் என்று கோரியதன்பேரில் திருஞானசம்பந்தர் மதுரைக் குச்செல்லப் புறப்படுகிறார்.அவரைத்திருநாவுக் கரசர் நாளும் கோளும் சரியல்ல என்று கூறித் தடுத்தார். அதுபோது கோளறுபதிகம் என்று போற்றப்படும் ''வேயுறு தோளிபங்கன்'' என்று தொடங்கும் பதிகத்தைப் பாடினார். இப்பதிகத் திருக்கடைக்காப்புப் பாடலில் கீழ்க் கண்டபடி

தானுறு கோளும் நாளும் அடியாரைவந்து
நலியாதவண்ணம் உரை செய்
ஆனசொல் மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே.

என்று ஆணையிட்டுக் கூறியுள்ளார்.

(2) திருவெண்காடு பதிகத்தில்

''மேற்சொல்லிய அருந்தமிழ்ப்பத்தும் வல்லவர்
அல்லலோடு அறுவினை அறுதல் ஆணையே''

என்று ஆணைகூறியருளியுள்ளார். பிறவித் துன் பங்கள்-அவைகளுக்கு மூலகாரணமான வினை களும் விட்டொழியும் என்று ஆணையிட்டுள் ளார்.

(3) திருவேதிகுடியில் பாடியருளிய திருப் பதிகத்தின் திருக்கடைக்காப்பில்

''வேதி குடியாதிகழலே
சிந்தை செயவல்லவர்கள் நல்லவர்களென்ன
நிகழ்வெய்தியிமையோர்
அந்தவுல கெய்தியர சாளுமதுவே சரத
மாணை நமதே''.

(சரதம்-நிச்சயம்) தேவர் உலகை அரசாளுவர் என்பது நிச்சயம் என்று கூறியதுடன் இது நமது ஆணையென்றும் குறிப்பிட்டுள்ளார்.

(4) திருக்கழுமலப்பதியில் (சீகாழி) பாடியருளிய பல பதிகங்களில் ''மடன்மலி'' என்று தொடங்கும் திருப்பதிகத்தில் திருக் கடைக்காப்புச் செய்யுளில்

''ஞானசம்பந்தன் நற்றமிழ் மாலை
நன்மையாலுரை செய்து நவில்வார்
ஊன சம்பந்தத்துறு பிணி நீங்கி
யுள்ளமுமொரு வழிக் கொண்டு
வானிடை வாழ்வர் மண்மிசைப் பிறவார்
மற்றிதற் காணையும் நமதே''.

என்று கூறியுள்ளார்.

(5) திருஞானசம்பந்தரின் தாயார் பகவதியார் பிறந்த ஊரான திருநனிபள்ளி யில் அவர் பாடிய ''கடல் வரையோத'' என்று தொடங்கும் பதிகத்தின் கடைசியில்

''இடுபறை யொன்றவத்தர் பியன் மேலிருந்
யாலுரைத்த பனுவல் [தினிசை
நடுவிருளாடுமெந்தை நனிபள்ளியுள்க வினை
கெடுதலாணை நமதே''

என்று பாடியருளிஉள்ளார்.

இத்திருப்பதிகமே பாலையாயிருந்த திரு நனிபள்ளியை நெய்தலாக்கிற்று என்று நம்பி யாண்டார் நம்பிகள் அருளிய திருஉலா மாலை யிலும் திருகளிற்றுப் படியாரிலும் (70ம் பாடல்) போற்றப்பட்டுள்ளது.

திருஞானசம்பந்தரின் அற்புதச் செயல் களை நோக்குங்கால் அவருடைய உள்ளக்கிடக் கையை - அவர் விரும்பியதை சிவபெருமான் நிறைவேற்றியுள்ளான் என்பது தேற்றம். சாதா ரண வேண்டுகோளுக்கே இறைவன் அவர் விரும் பியதை நிறைவேற்றியுள்ளான் என்றால் அவர் ஆணையிட்டுக் கூறியுள்ளதை நிச்சயமாக தவ றாமல் நிறைவேற்றி வைப்பான் என்பதில் ஐயம் ஏற்பட நியாயமில்லை. அவர் ஆணை யிட்டபடியே நிறைவேறும் என்பது உறுதி. நம் மில் எத்தனைபேர் இதை உணர்ந்துள்ளோம். இனியேனும் அவர் ஆணைப்படி அவர் திருப் பதிகங்களை நாடோறும் ஓதி அவர் காட்டிய நெறி நின்று பிறவியாகிய பெரும்துன்பத்தினின் றும் விடுபடுவோமாக.

திருஞானசம்பந்தர் திருவடிகளே போற்றி!



# விநாயகனே வெவ்வினையின் வேரறுக்க வல்லான்

செந்தமிழ் செல்வமணி கோ. சண்முகம்

'இருவினை தன்னை அறுத்து இருள் கடிந்து,
தலம் ஒரு நான்கும் தந்து எனக்கு அருளி,
மலம் ஒரு மூன்றின் மயக்கம் அறுத்தே,
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலன் கதவை அடைப்பதும் காட்டி''

*(30-34)*

(நல்வினை, தீவினை என்ற இருவினையின் பயனை முழுதும் அகற்றி, அவற்றின் காரணமாகிய பிறவித் துன்பத்தை விலக்கி, சரியை, கிரியை, யோகம், ஞானம் இவைகளால் அடையும் ஒப்பற்ற சாலோக சாமீப சாரூப, சாயுச்சிய என்னும் நிலைகளை எனக்கு கொடுத்தருளும் மும்மலங்களில் ஒன்றான அறியாமைக்கு காரணமான ஆணவமலத்தை அகற்றி, உடலில் உள்ள ஒன்பது வாயில்களையும், ஐம்புலன்கள் என்கிற கதவுகளையும் ஒப்பற்ற ஓங்கார மந்திரத்தால் அடைப்பதும் காட்டியருளி)

நம் பிறவி தோறும் தொடர்ந்து வருவது நல்வினை, தீவினை என்கிற இருவினை ஆகும். ஒரு உழவனுக்கு அவன் பயிரிட்ட பயிர் உணவாய்ப் பயன்பட்டு அடுத்த ஆண்டிற்கு விதையாகவும் அமைதல் போன்று வினை உயிரோடு தொடர்ந்து வரும். வினைகள் சடமாக இருப்பதால் தாமே சென்று தம்மைச் செய்தவனை உணர்ந்து சேர்தல் இயலாது. இறைவனே அவற்றை அறிந்து அவற்றின் பயனைக் கூட்டுவிப்பான். எனவே இறைவன் ஆணை வழியே வினைகள் உயிர்களை சென்றடையும். திருமூலர் இக்கருத்தினைத் தெளிவாகவும், அழகாகவும் கீழ்வருமாறு குறிப்பிடுகின்றார்.

''புண்ணிய பாவம் இரண்டுள பூமியில்
நண்ணும்பொழுது அறியார்சில ஞானிகள்
எண்ணிரண்டையும் வேரறுத்து அப்புறத்து
அண்ணல் இருப்பிடம் ஆய்ந்து கொள்வீரே.''

சைவ சமயத்தில் சொல்லப்படும் நெறிகள் நான்கு. இவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவை. வீடு பேற்றிற்கு உரிய ஒரே சாதனம் ஞானம் ஒன்றே. சரியை, கிரியை, யோகம் என்னும் மூன்று வகையான தலங்களும் ஞானமாகிய சாதனத்திற்குச் சாதனமாகும்.

ஆணவம், கன்மம், மாயை என மலங்கள் மூன்று வகையாகும். உயிர்களின் அறிவை அடியோடு மறைத்து அறியாமை வடிவமாகச் செய்வதே ஆணவ மலம்தான். எல்லாப் பொருட்கும் மேலாய் பரந்து விளங்கும் பரம் பொருளை உணருமாறு செய்வதே மாயை கன்மங்களின் நிலையாகும். ஒரு உயிர் சரியை, கிரியை யோகங்களில் நிற்றலே, மும்மலங்களிலிருந்து முற்றும் நீங்கி உயர்ந்த நிலையை அடைய முடியும்.

இதனை

''அண்டசம் சுவேத சங்கள் உற்பிச்சம் சரா
யுசத்தோடு,
எண் தருநாலெண்பத்து நான்கு நூறாயிரத்தால்
உண்டு பல் யோனி எல்லாம் ஒழித்துமானிடத்து
தித்தல்
கண்டிடிற் கடலைக் கையால் நீந்தினன் காரி
யங்காண்''

என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தால் உணரலாம்.

மனிதனின் ஒன்பது உறுப்புகளின் வழிகளையும் (இருகண், இரு செவி, நாசியின் இரு துளை, வாய், எருவாய், கருவாய்) ஐம்பொறிகளையும் ஓங்கார மந்திரத்தால் அடக்க வேண்டும்.

''ஒண்ணுள்ளே ஒன்பது வாசல்வைத்தாய்
ஒக்க அடைக்கும்போது உணரமாட்டேன்''

என்றார் அப்பர் அடிகள்.

நல்வினை, தீவினை என்னும் இருவினை, ஆணவம், கன்மம், மாயை என்கிற மும்மலம் இவற்றை அழித்து உடலில் உள்ள ஒன்பது

வாயில்கள் ஐம்பொறிகள் இவைகளை ஓங்கார மந்திரத்தால் அடைக்கும் வகையினை தமக்கு விநாயகப் பெருமான் அளித்தார் என்பதை 30-34 அடிகளில் ஔவைபிராட்டியார் உணர்த்து கின்றார்.

''ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங்கலையின் எழுத்து அறிவித்துக்
கடையிற் கழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்(35-39)

(யானை அங்குசத்தால் அடக்குதல்போல இடைபிங்கலை வழியாகப் பிராணனை வீணாக் காமல், ஆறு ஆதாரங்களில் நிலை பெயராமல் நிற்கச் செய்து, பேசும் பேச்சினை ஒழித்து (மௌனியாகி) இடைநாடி பிங்கலை நாடிக் குரிய மந்திரத்தையும் அறிவித்து சுழுமுனை நாடியின் முடிவில் பிரமரந்திரத்தையும் காட்டி யருளி சூரியன், சந்திரன் அக்கினி என்னும் மூன்று மண்டலங்களிலும் ஊடுருவிச் செல்லும் தூண்போல்)

யானையை அங்குசத்தால் பாகன் அடக்குவது போன்று யோகிகள் இடைகலை பிங்கலை வழி யாக விணாக்காமல் பிராணனை ஆறு ஆதாரம் வழியே செல்லுமாறு அடக்குவர்.

ஆதாரங்கள் ஆறு வகையாகவும், மூன்று மண்டலங்களாகவும் பிரிந்து உள்ளது. மூலாதா ரமும் சுவாதிட்டானமும் அக்கினிகண்டம் என் றும் மணிபூரகமும் அநாகதமும் சூரிய கண் டம் என்றும், விசுத்தியும் ஆக்கினையும் திர கண்டம் என்றும்,ஆறுஆதாரங்கள் இரண்டு இரண்டாய் மூன்று மண்டலங்களாகப் பிணைந் துள்ளன. இந்த மூன்று மண்டலத்திலும் ஊடுருவிச் செல்லும் தூண்போல் தொங்கி எழு கிறது குண்டலினி.

இதையே,

''ஆதாரத்தாலே நிராதாரத்தே சென்று
மீதானத்தே செல உந்தீபற
விமலற்(கு) இடம் அது என்(று) உந்தீபற''

என்கிறார் உய்யவந்த தேவநாயனார், பதி னான்கு சரித்திர நூல்களில்ஒன்றானதிருவுந்தி யாரில்.

வாழ்க்கைப்பாதையில் இன்பமும் துன்ப மும் மாறி மாறி வரும். இன்பம் வந்துற்றபோது இன்பத்தில் திளைக்காமலும் துன்பம் வந்துற்ற போது துன்பத்தில் துவளாமலும் இன்ப துன் பத்தை ஒன்றாகவே கருதுவர் அருளறிவு பெற்ற ஞானிகள். அவ்வருளறிவினால் திரி கரணமவுனம் அடைவர்.

''மோனம்என்பது ஞான வரம்பு'' என்ற முதுமொழியின் உட்பொருளையும் அங்குசம் குறித்து திருமூலரின் அனுபவத்தினையும் ஈண்டு நாம் கவனித்தல் வேண்டும்.

## நூல் மதிப்புரை

நூல்பெயர்: வழிபாட்டுமலர்,
தொகுப்பாசிரியர்: கனகசுப்பிரமணியம்.
வெளியீடு: வள்ளலார் பேரவை,
கந்தகோட்டம், சென்னை-3.
பக்கம்: 36. விலை: ரூ.5.00.

நாள்தோறும் ஓதி உருகத்தக்க தேவாரம், திருவாசகம், திருவருட்பா, முதலிய அருள்நூல் களிலிருந்து தொகுக்கப்பெற்ற அருட்பாட களின் தொகுப்பு இந்நூல். மந்திர சக்தி, வாய்ந்த இவ்வழிபாட்டு மலர் வல்வினைகள் நீக்கும் நல்வினைகள் பெருக்கும். எல்லா வள மும், நலமும் நல்கும்.

நூல்பெயர்: தெய்வமணிமாலை,
நூலாசிரியர்: கனகசுப்பிரமணியம்.
நூல்வெளியீடு: வள்ளலார் பேரவை,
கந்தகோட்டம்,
சென்னை-600003.
பக்கம்: 40 விலை ரூ.5.00

தெய்வமணிமாலையில் ஒரு பாடலையா வது நாள்தோறும் நம்பிக்கையோடு ஓதி இறை வன் முருகன் திருவருளும், நலமான வாழ்வும், வளமான வாழ்வும் பெற்று வாழ்வாங்கு வாழ்ந் திடுவோமாக.

—நிறைமதி


''சேவிக்கு மந்திரம் செல்லுந்திரைபெற
ஆவிக்குள் மந்திரத்து ஆதாரம் ஆவன
பூவுக்குள் மந்திரம் நோக்கற நோக்கிவிடில்,
ஆவிக்கு மந்திரம் அங்குச மாமே''.

இந்நிலையை விநாயகப் பெருமான ஔ வைப்பிராட்டியாருக்கு அளித்தார் என்பதை 35-36 வரிகளில் தெரிவிக்கின்றார்.

நம் உடலில் பிங்கலை இடைகலை, சுழு முனை என்னும் நாடிகள் உள்ளன. இதை சூரியன், சந்திரன், அக்கினி என்றும் அழைப் பர். இடைகலை இடது நாசி வழியாகவும், பிங் கலை வலது நாசி வழியாகவும் சுவாசம் பாயும். சுவாச அசைவுதான் சித்த அசைவாகும். எனவே பிராணனை யோகிகள் தம் வசப்படுத் துவார்கள். பிராணாயாமத்தில் வெளிக்காற்றை உட்கொள்வது பூரகம் என்றும், உட்கொண் டதை உள்ளேயே நிறுத்துவது கும்பகம் என் றும், கும்பித்ததை வெளிவிடுவது இரேசகம் என்றும் குறிப்பிடுவார்கள்.

உடலில் உயிர் நிற்பதற்கு காரணம் இடை கலை, பிங்கலை இடைவிடாமல் நிகழ்வதால் தான். எனவே அந்த இருவழியின் செல்லும் பிராணவாயுவை நிறுத்தி அவற்றை சுழுமுனை வழியே செலுத்தி உச்சி ஓட்டில் (கபாலம்) உள்ள ஞான வெளியில் உறவாடல் செய்தால் மூலக்கனல் மூண்டெழும் என்பதை 37-39 வரி கள் அறிவுறுத்துகின்றன.

—தொடரும்.



சித்திரபாரதம்
கதை வடிவம்: செவ்வேள்
படம் MN.ராஜா
தெய்வக்கற்பினள் திரௌபதியின் துகில் ஆயிரம் ஆடைகளாக வளர்ந்து சிறந்ததைக் கண்டும், துரியோதனன் நல்லுணர்வு பெறவில்லை.
"துச்சாதனா! அம்மாயக்காரியை இழுத்து வந்து என் தொடையின் மேல் அமரச்செய்" என்று தம்பிக்கு ஆணையிடுகிறான் துரியோதனன்.
அவன் தகாத ஆணை கேட்டுவானில் கருமேகங்கள் சூழாத போதும், இடியும், மின்னலும் தோன்றுகின்றது. நட்சத்திரங்கள் உதிர்கின்றன பூகம்பம் உண்டாகிறது. தோன்றிய உற்பாதங்களைக் கண்டு யாவரும் நடுங்க திரௌபதி கொதித்துச் சாபமிடுகிறாள். "
இவ்வற்பன் தொடையைப் பறவைகள் தம் வாயலகினால் கிழிக்க இவனுயிர் இவனைவிட்டு நீங்கட்டும்.
என் கூந்தலைப் பிடித்து இழுத்தும், துகிலை தீண்டி அவிழ்த்தும் மானபங்கம் செய்த துரியோதனாதியரின் தலைகளைப் போரிலே அறுத்து, இவர்கள் இரத்தம் ஆறாகப் பெருகி ஓட ஜயபேரிகை முழக்கும் அன்றுதான் இனி நான் என் அவிழ்ந்த கூந்தலை முடிப்பேன்
வீமனும் கொதித்துச் சபதம் செய்கிறான்.
"துரியோதனன் உடலையும், அவன் தம்பிமார் உடல்களையும் என் ஆயுதமாகிய கலப்பை கொண்டு உழுது பிளப்பேன். இந்தத்துச்சாதனன் உடல்குருதியை வாரி என் கைகளால் உண்டு தாகம் தணிக்கும் வரை, இனி நான் என்கைகளால் நீர் பருக மாட்டேன்.
"திரௌபதியை அடிமை என்ற கர்ணனை நான் கொல்வேன்" என்று அர்ச்சுனன் சபதம் செய்ய "சூதில் வல்ல சகுனியின் தலையை நான் துணிப்பேன்" என்கிறான் சகாதேவன் "சகுனி மகனை நான் கொல்வேன்" என்று நகுலன் சபதம் செய்கிறான்.


பாண்டவர்கள் சபதம் கேட்டு நடுங்கிடும் திருதராட்டிரன் திரௌபதியை வணங்குகிறான்.
தாயே! தாயே சரணம். மதியில்லாமல் என் மக்கள் செய்த மாபிழையை மன்னித்து விடு தாயே, மன்னித்து விடு.
மகனே தருமா! நீயும் உன் தம்பிகள் செய்த மாபிழையை மன்னித்துவிடு. நீ சூதில் இழந்த இராச்சியமும், செல்வங்கள் யாவும் உனக்கே இனி நான் சொந்தமாக்குகிறேன். உடன் இந்திரப் பிரத்தம் புறப்படு.
துரியோதனன், தந்தையின் முடிவை ஏற்காமல் சீறுகிறான்
"தருமன் பெரிய சத்திய விரதனோ! சூதில் இழந்ததைத் திரும்ப யாசகமாய் பெறுவதுதான் தருமமோ?" என்று கேலிபேசுகிறான்.
பன்னிரண்டு கால வனவாசமும் ஓராண்டு கால அஞ்ஞாத வாசமும் புரிந்து இவர்கள் திரும்பினால் இவர்களுடைய இராச்சியத்தை நான் திரும்ப ஒப்படைப்பேன். இவர்கள் காட்டிற்குப் போகட்டும்.
திரௌபதி தருமரிடம் திருமாலைத் துதித்துப் பிறகு சூதாடுமாறு வேண்டுகிறாள். "கேசவா! நாராயணா! மாதவா! கோவிந்தா! விஷ்ணு! மதுசூதனா! திரிவிக்ரமா! வாமனா! ஸ்ரீதரா! ரிஷிகேஷா! பத்மநாபா! தாமோதரா!" என்று திருமாலின் பன்னிரு திருநாமங்களைக் கூறித் துதித்துப்பின் சகுனியிடம் சூதாடுகிறார் தருமர்.
தருமரும் "எங்கள் அடிமைத் தன்மையைப் போக்கிக் கொண்ட பின்னரே வனம் போவோம்" என்று கூறி மீண்டும் சகுனியுடன் தம் புண்ணியங்களைப் பந்தயம் வைத்துச் சூதாடுகிறார்.
மாயவன் திருவருளால் சகுனியின் மாயை வெல்லவில்லை. ஜெயம் பாண்டவர்களுக்கே!
அடிமைத் தளையிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளும் பாண்டவர்கள், வனவாசம் புறப்படுகிறார்கள். துட்ட சதுட்டர்களைத் தவிர மற்ற யாவரும் கண்ணீர் சிந்திக் கதறுகிறார்கள்.

# ஆடல் காணீரோ... திருவிளையாடல் காணீரோ...



**கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன் (8)**

முருகப் பெருமானைப் பற்றி கந்தரனுபூதி ஆசிரியர் ''பெம்மான் முருகன் பிறவான்' என்றார். மறைந்திருப்பது வெளியில் தோன்றி வருவதை உதயம் என்பர். முருகன் உதித்தான் என்றுதான் கந்தபுராணம் (ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய) கூறுகின்றது. அம்மை பராசக்தியைப் பற்றி கருதரிய கடலாடை உலகு பல அண்டம் கருப்பமாய் பெற்ற கன்னி' என சிவப்பிரகாச சுவாமிகளும்' 'ஞாலமெல்லாம் பெற்றெடுத்தும் கன்னியாகி' எனப் பரஞ்சோதி முனிவரும் கூறுகின்றனர். முருகப் பெருமான் அம்மை பராசக்தியான மீனாட்சியம்மையின் மகனாக உக்கிர குமாரன் என்ற பெயருடன் தோன்றி வளர்ந்ததாகக் கூறுகிறது மதுரை வரலாறு. ஒன்றைச் செய்வதும் செய்யாதிருப்பதும் வேறு செய்தலும் தொழிலாகவுடையவன், மாயையை வென்றவனான இறைவனை யார் அளவிட முடியும்?

''ஒன்றினைச் செய்கை; செய்யாது ஒழிகை
வேறொன்று செய்கை
என்றிவை யுடையோன், ஆதி ஈறிலாப் பரம
யோகி
நன்றுதீது, இகழ்ச்சி; வேட்கை; நட்பு: இகல்
விளைக்கும் மாயை
வென்றவன் செய்யும் மாயை விருத்தியார்
அளிக்க வல்லார்?''


தனது நெற்றிக் கண்ணிலிருந்து உண்டான முருகப் பெருமானை, கருப்பம் எய்தாது உலகம் பூராவும் ஈன்றவளான அம்மை மீனாட்சியிடம் தோன்றுமாறு திருவுள்ளம் பாலித்தான். மீனாட்சியம்மையின் தோழிகள் கருப்பவதியாகி அம்மை அவளது பொலிவைக் காட்டி அருளவேணும் என்று வேண்டியதன் காரணமாக கருப்பலட்சணம் காட்டியருளினாள். திங்கட்கிழமையும் திருவாதிரை நாளும் வந்தது. வேதியர் மகிழ்ச்சி கொண்டனர். அவர்களது தெய்வீகமான அக்கினி குண்டம் வலஞ்சுழித்து எழுந்தது. தங்களது பாரத்தைத் தாங்குவதற்கு நல்ல ஒரு பெரியோன் தோன்றப் போகின்றான் என்று உலகத்தைச் சுமந்து களைத்த அட்டதிக் கஜங்களான எட்டு யானைகளும், ஆதிசேடன் என்னும் பாம்பும் ஆறுதல் அடைந்தன. தேவேந்திரன், மேருமலை, வருணன் ஆகியோருக்குத் தங்களை ஒருவன் அடக்குவதற்குத் தோன்றுகின்றான் என்பதை அறிவிப்பதுபோல் இடந்துடிந்து பயம் ஏற்பட்டது (இவர்களை அடக்கிய வரலாறுகளைப் பின்வரும் திருவிளையாடல்களில் காணலாம்) ஆலகால விடத்தை அமுதமாக உட்கொண்டு தேவர்களைக் காத்த இறைவனும், இறைவியும் கொண்டிருந்த வேடத்துக்கு ஏற்றவாறு முருகப் பெருமான் தோன்றினான்.

''ஆலத்தை அமுதமாக்கும் அண்ணலும் அணங்
கும் கொண்ட
கோலத்துக்கேற்ப காலைக் குழந்தை வெங்
கதிர்போல் அற்றை
காலத்துதித்த சேய்போல் கண்மழைபிலிற்று
நிம்ப
மாலைத்தோள் செழியன் செல்வமகள் வயிற்
றில் தோன்றினானே!''

'பிறந்தனன்' எனக் கூறாது ''தோன்றினன்'' எனக் கூறும் நயம் மகிழ்ச்சியூட்டுகின்றது. உலகிலுள்ள அரசர்கள் அனைவரும் வந்து குழந்தையைக் கண்டு அளவிலா மகிழ்ச்சி கொண்டனர். 'முருகனே இவ்வாறு வந்துள்ளான்' என்பாரும் ''கற்புக்கரசியான மீனாட்சி அம்மையின் தவத்தின் உருவமே இந்த குழந்தை'' என்றும், ''ஆண்மக்களின் தலைவனாக அழகில் விளங்கும் மன்மதனே இவனைக் கண்டு ஆசை கொள்வான்'' என்றும் குழந்தையைக் கண்டு சென்றவர்கள் எல்லாம் களிப்புடன் பேசிக் கொண்டனர். பிற்காலத்தில் வருணன், மேரு பர்வதம், தேவேந்திரன் முதலானவரின் வீரத்தை அழித்து அச்சமடையச் செய்யும் திருவுருப்பெற்ற அக்குழந்தைக்கு உக்கிரவருமன் எனப் பெயரிட்டனர்.

''கரிய வெண்திரை நீர்ச்செல்வன்; கல்இறகு
அரிந்த வென்றித்
தெரியலன்; உலகந்தாங்கும் தெய்வத வரைக்
கோனாதித்
தரியலர் வீரம் சிந்த; தருக்கழிந்து அச்சந்
தோற்றக்
குரிய காரணத்தால் நாமம் உக்கிரவருமன்
என்பார்''

உடல் திண்ணென்று இருந்தால் கண்ணப்ப நாயனாருக்குத் திண்ணன் என்று பெயரிட்டனர் என்பர். அதுபோல் இக்குழந்தை உக்கிரமான தோற்றமுடையதாக இருந்ததால் உக்கிர வருமன் எனப் பெயரிடப்பட்டது. இக்குழந்தை பிறந்தபோது சடையுடன் பிறந்ததால், கோச்சடிலவருமன் எனப்பெயர் இட்டதாகக் கூறுகிறது திருவால வாயுடையார் திருவிளையாடற் புராணம்.



''எண்பயிலும்' நெடுஞ்சடிலம் பிறங்குதலால்
இங்கிவனுக்கு
ஓண்புவியோர் கொண்டாடும் உபநயனத் திரு
நாமம்
மாண்பரவு கோச்சடில வருமன் எனல் இயையு
மென
விண்பரவ விளங்குவித்தான் விதுகுடுமிப் பெரு
வழுதி''

—திருவாலவாயுடையார் புராணம்

கோச்சடிலன் எனப் பெயர் பெற்ற பெருமான் அந்தணருக்கு அளித்த அகரம் என்னும் ஊர்தான் இன்று மதுரைக்கு மேற்கில் கோச்சடை எனப் பெயர் பெற்று விளங்குகின்றது என்பர் நாலாவது மாதத்தில் கோயிலுக்கு அழைத்துச் சென்றும், ஆறாம் மாதம் அன்னம் ஊட்டியும், பதிமூன்றாம் மாதம் முடியெடுத்தும், ஐந்தாம் ஆண்டிலே பூணூல் கலியாணமும் நடத்தினர். எந்த வித்தையையும் குருமுகமாக அறியவேண்டும் என்ற நியதியின் படி, தேவ குருவான வியாழபகவானிடம் எட்டு வயதிற்குள் உக்கிரவர்மர் அறிந்தார். சிவபெருமானான தந்தையிடமே பாசுபதாத்திரத்தையும் அறிந்தார். பதினைந்து வயதடைந்த குழந்தைக்குப் பக்கத்தில் பெண்கள் வந்து நின்றனர். பெண்களின் கண்களுக்கு வேலும் அவர்களது சாயலுக்கு மயிலையும் ஒப்பிடுவர். சூரபத்மனைக் கொன்ற முருகனே இவன் என எண்ணி வேலும் மயிலும் பக்கத்தில் வந்து நின்ற மாதிரி பெண்கள் வந்து நின்றனர் என்கின்றனர் கவிஞர் முப்பத்திரண்டு லட்சணங்களும் நிரம்பிய அக்குழந்தை முடிசூட்ட எண்ணிய சோமசுந்தர பாண்டியன், அதற்கு முன் திருமணம் பற்றி எண்ணினார்.

தனது மகனுக்கு ஏற்ற பெண் எங்குள்ளாள் என ஆராய்ச்சி செய்தததில் வடபுறத்தில் மணவூர் (கல்யாணபுரம்) என்ற நகருக்கு அரசனான சூரியவம்சத்தைச் சேர்ந்த சோமசேகரன் என்பவனுக்கு காந்திமதி என்று ஒரு பெண் இருப்பதை அறிந்து அப்பெண்ணைக் கேட்க விழைந்தனர். ஒருநாள் இரவில் சோம சுந்தரப் பெருமாள் சோமசேகரன் கனவிலே தோன்றி ''உக்கிர குமாரனுக்கு உன் மகளைத் திருமணம் செய்து கொடுப்பாயாக'' என்று உத்திரவிட்டார்.

''அன்னம் இறைகொள் வயல் மதுரைச் சிவன்
யாம் அரசநீ ஈன்ற
பொன்னனையாள்தனை மதுராபுரியிற் கொடு
போய் மறுபுலத்து
மன்னர் மகுடமணி இடற மழுங்கும் கழற்கால்
சுந்தரனாம்
தென்னர் பெருமானுக்குக் கொடுத்தியென்று
செப்புதலும்''

மகிழ்ச்சி கொண்ட சோமசேகரன் தன் அருமை மகளை அழைத்துக் கொண்டு மதுராபுரி வரலானார். அது நேரத்தில் பெண் கேட்க வந்த மதுரை மந்திரிகள் அவர்களை வழியிலேயே சந்தித்தனர். அனைவரும் மதுரை வந்து சேர்ந்தனர். மதுரை கல்யாணக்கோலம் கொண்டது. மீனாட்சியம்மையும் சோமசுந்தர பெருமானும் திருமணம் செய்து கொண்ட அன்று மதுரையின் அழகு கண்ட மக்கள் ''மதுரைக்கு மதுரைதான் சமம்' எனக் கூறினார். உக்கிரபெருவழுதியின் திருமணத்தன்று ''மதுரையே மதுரையின் அழகை மிஞ்சிவிட்டது' எனப் பேசிக் கொண்டனர்.

''தென்றல் நாடன் திருமகளைத் தேவர் பெரு
மான் மணம்புரிய
மன்றல் அழகால் ஒரு நகர்ஒப்பு அதிகமின்றி
மதுரை நகர்
அன்றுதானே தனக்கொப்பாளும் வண்ணமணி
அமைத்தார்
இன்று தானே தனக்கதிகம் என்னும் வண்ணம்
எழிலமைத்தார்!''

தேவர்களும் முனிவர்களும் ;திரண்டனர். (திருவிளையாடற் புராணத்தில் உக்கிரகுமாரன் திரு அவதாரப் படலத்தில் புருட சாமுத்திரிகா லட்சணமும், திருமண சமயத்தில் ஸ்திரி சாமுத்ரிகா லட்சண சாத்திரமும் விவரமாக பாடப் பெற்றுள்ளன). திருமணத்தில் பெண்ணின் தந்தை, பெண்ணின் திருக்கரத்தில் வைத்து 'என் மகளான இவளை இன்னாருடைய பேர்த்தியை, இந்த மணமகனுக்கு இன்னாருடைய மகனுக்கு, இன்னாருடைய பெயரனுக்கு கொடுக்கிறேன் என மந்திரம் கூறும் வழக்கம். அம்முறையில் சோமசேகரன்''சூரிய குலத்தைச் சேர்ந்த சோமசேகரன் என்பது என் பெயர். சந்திரகுலத்தை அலங்கரிக்கப் பிறந்த சுந்தர மாறன் என்ற பாண்டிய அரசரின் புதல்வரான உக்கிரகுமாரருக்கு என் மகளை மனைவியாக அளித்தேன்'' என்று மந்திரம் கூறி தாரை வார்த்தார்.

''இரவி தம்மருமான் சோமசேகரன் என்பேர்;
திங்கள்
மரபினை விளக்க வந்த சுந்தரமாறன் மைந்தன்
உரவு நீர் ஞாலம் தாங்கும் உக்கிரவருமற்கு
இன்றென்
குரவலர் கோதை மாதைக் கொடுத்தனன் என
நீர் வார்த்தான்;


முறைப்படி நடக்கும் திருமணத்தில் செய்ய வேண்டிய தாரை வார்த்தல், கைப்பிடித்தல் முதலானவைகள் குறைவறச் செய்யப் பெற்றன. கலியாணம் முடிந்த பின்னர் கோயிலுக்குச் செல்லும் வழக்கம். இம்மையிலும் நன்மை தருவார் கோயிலெனச் சோமசுந்தரப் பெருமானாலேயே பிரதிட்டை செய்யப்பட்ட கோயில் ஒன்று உண்டு என்பர். சிவபெருமான் அரசனாக முடிசூடியபோது அரசன் தெய்வ வணக்கம் செய்ததாக வரலாறு. அவ்வாறு விளங்கிய திருக்கோயிலை அடைந்து உக்கிர குமார தம்பதிகள் வணங்கினர். பின்னர் சோமசுந்தரப் பெருமான் தன் மைந்தனை நோக்கி ''மகனே! இந்திரனும் மகாமேரு பர்வதமும், கடலும் உனக்குப் பெரும் பகைவர். உன்னை எதிர்த்தால் இந்திரன் முடி சிதற வளை யென்னும் ஆயுதத்தால் அடி. மேருவை செண்டு என்னும் இந்த ஆயுதத்தால் அடி. கடலில் இந்த வேலைவிடு என மூன்று ஆயுதங்களையும் தந்து உக்கிரகுமார பாண்டியனை மதுரைக்கு அரசனாக முடி சூட்டினார்.

''மைந்த கேட்டி! இந்திரனும் கடலும் உனக்கு
வான்பகையாம்
சந்த மேரு தருக்கடையும்; சதவேள்விக் கோன்
முடி சிதற
இந்த வளை கொண்டு எறி; கடலில் இவ்வேல்
விடுதி, இச்செண்டால்
அந்த மேருதனை புடையென்று எடுத்துக்
கொடுத்தான் அவை மூன்றும்''

மந்திரிகளிடமும் உக்கிரகுமாரனை அறிமுகப் படுத்தி ஒப்புவித்து, மகனிடம் ''மந்திரிகளின் சொற்படி அரசாட்சியை நடத்துக!'' எனக் கூறித் தனது சிவகணங்களை யெல்லாம் பழைய வடிவம் கொண்டு வரச் செய்து, தனது துணைவியாக வந்த மீனாட்சியம்மையுடன் கோயிலில் சென்று தனது பண்டைய வடிவத்துடன் மீனாட்சி-சுந்தரர்களாக இன்றும் மதுரைக்கு நாயக தெய்வமாய் விளங்கி அருள் பாலித்து வருகின்றார் அப்பெருமான்.

'பன்னருங் கணங்களெல்லாம் பண்டைய வடிவ
மாகத்
தன்னருட்!துணையாய் வந்த தடாதகைப்
பிராட்டியோடும்
பொன்னெடுங் கோயில்புக்கு பொலிந்தனன்
இச்சை தன்னால்
இன்னருள் படிவங் கொள்ளும் ஈறிலா இன்ப
மூர்த்தி''.

(தொடரும்)



## வீண் விவாதம் செய்யாதே!

**பயனில்லா வாதங்களினால் நன்மை என்ன விளையும்? தூயநம்பிக்கையுள்ள மனத்துடன் இறை நாமத்தை ஜெபம் செய். அது உனக்கு நன்மை தரும்.**

*—இராமகிருஷ்ண பரமஹம்சர்*

# சுவாமிமலை முருகா

# வாழும் பெருமாளே

## பாரதி தீர்த்ததாஸன்

நாம் படித்துவிட்டோம் என்ற கல்விச் செருக்கு எவருக்கும் வரக்கூடாது. நாம் என்ன கற்பனை செய்து பாடினாலோ, எழுதினாலோ, பேசினாலோ முன்னோர்கள் கூறியதை நாம் கூறமுடியுமே தவிர நம்மால் புதியதாக எதையும் கூறமுடியாது. முன்னோர்களின் கற்பனைகளும் நூல்களும் அளவில் அடங்காதவை. எல்லா நூலையும் நாம் எழுதவில்லை. முன்னோர் எழுதியவற்றைப் படிக்கவுமில்லை. நம்மைக் காட்டிலும் படித்தவர்கள் உலகில் நிறைய உள்ளனர். அப்படியிருக்க நாம் ஏன் கர்வம் கொள்ளவேணும்? இலக்கணமறிந்தவர் இலக்கியம் அறியமாட்டார். இலக்கியம் கற்றவருக்கு இலக்கணம் வராது. இரண்டும் கற்றவருக்கு இசை நூல் தெரியாது. எல்லாம் அறிந்தாலும் சபையில் அழகாகப் பேசவராது. இந்நிலையில் கல்விச்செருக்கு எதற்கு? ஆயுதம் செய்பவனுக்கு அதனைப் பயன்படுத்தத்தெரியாது. பயன்படுத்தத் தெரிந்தவனுக்கு ஆயுதம் செய்யத்தெரியாது. ஓவியக்கருவி செய்யக் கூடியவனுக்கு ஓவியம் எழுதத் தெரியாது. ஓவியம் எழுதத் தெரிந்தவனுக்கு கருவி செய்யமுடியாது. எனவே எல்லாமறிந்தவர் உலகில் கிடையாது. பருத்தியை நூலாக்கி ஆடையாக நெய்து கொடுத்தால் அணிந்துகொள்ளுவது மிக எளிது. நெல் விதைத்துத் தானியம் கொண்டுவந்து கொடுத்தால் உணவாகி உண்பது கடினமா? அதுபோல் பெரியவர்கள் எழுதிய இலக்கண இலக்கியங்களைக் கற்று நாம் பேசுவதும் பாடுவதும் வியப்பன்று. இதில் செருக்கு கொள்ள என்ன உள்ளது? படித்த பெரியோர் முன் சாதாரணப் படிப்புப் படித்தவர் வெய்யிலில் வைக்கப்பட்ட விளக்குப்போன்று விளங்குவர்.

படித்தவர் இல்லாத இடத்தில் கண்டபடி சத்தமாக பேசலாம். படித்தவர் எதிரில் அடங்கியே ஆகவேண்டும். பேசிக்கொண்டே இருக்கும்கிளி பூனையைக் கண்டவுடன் கீசுகீசு சென்று கத்தும். நம்மைக் காட்டிலும் வலியவர்கள் எதிரிலே அடங்கியே ஆக வேண்டும் என்ற கருத்தை,

''காணாமல் வேணதெல்லாம் கத்தலாம்;
கற்றோர்முன்
கோணாமல் வாய்திறக்கக் கூடாதே-நாணாமல்
பேச்சுப் பேச்சென்னும் பெரும்பூனை வந்தக்
கால்
கீச்சுக் கீச்சென்னும் கிளி''

என்றார் ஔவைப்பாட்டி.


உலகத்தைப் படைக்கும் தொழில் பிரமனுடையது. கல்விக்குத் தெய்வமான கலைமகளின் நாயகன். ஒரு சமயம் கயிலைக்குச் சிவ தரிசனத்திற்குச் சென்றபோது மயில் வாகனத்தில் அமர்ந்திருந்த முருகப்பெருமானை எண்ணி வணங்காமல் சென்றுவிட்டான். வீரவாகு தேவரை அனுப்பி பிரமனைத் தன்னிடம் வரவழைத்தார் முருகப்பெருமான். அப்போதும் பிரமன் முருகப்பெருமானை விழுந்து வணங்காமல் கைகுவித்து நின்றான்''நீர் யார்? என்ற முருகப்பெருமானுக்கு ''நான்தான் பிரமன் என அகங்காரத்துடன் பதிலுறுத்தான். ''உமது தொழில் என்ன?'' எனக் கேட்டதற்கு ''இவ்வுலகையெல்லாம் நானே படைக்கிறேன்'' என்று மீண்டும் செருக்குடனேயே பதில் கூறினான் பிரமன். ''எதைக் கொண்டு படைக்கின்றீர்?'' எனக் கேட்டதற்கு ''வேதத்தின் உதவி கொண்டு உலகத்தைப் படைக்கின்றேன்'' என்றான் பிரமன்.

''அடியேன் பிரமன். அடியேனுக்கு படைப்புத் தொழில் இறைவனருளை முன்னிட்டுக் கொண்டு இதைச் செய்து வருகிறேன்'' எனக் கூறியிருந்தால் கருணையின் உருவமான முருகப்பெருமானின் அருள் பெற்றிருப்பான். செருக்கு என்பது எவரையுமே அழிக்குமன்றோ?

முருகப்பெருமான் ''வேதம் பூராவும் தெரிந்தவர் என்றால் வேதத்திலிருந்துஏதாவது ஓரிடத்தைக் கூறும்'' என்றார். பிரமன் அப்போது வேத நாயகனான முருகன்-வேதமந்திர உருவானவன்-(வேத மந்த்ரசொரூபா நமோநம எனத் திருப்புகழ் கூறும்) ''ஓம்'' என்று ஆரம்பித்தான். முருகப்பெருமான்''அது என்ன ஓம்? அதன் பொருள் என்ன?'' என்றார். வேதத்தில் எந்த இடத்தை ஆரம்பித்தாலும் ஓம் என்ற எழுத்தில் ஆரம்பித்து ஓம் என்று சொல்லி முடிக்கும் வழக்கம். இந்த ஒரு எழுத்திற்குப் பொருள் தெரியாது கலைமகளின் கணவன் பிரமித்து நின்றான் என்றால் நாம் படித்தறிந்தவர் என எப்படி நம்மை அழைத்து கொள்ளுவது எனக் கேட்கிறார் கந்த புராண ஆசிரியரான கச்சியப்ப சிவாசாரியார்.

தூமறைக் கெல்லாம் ஆதியும் அந்தமும்
சொல்லும்
ஓமெனப்படும் ஓரெழுத்துண்மையை உணரான்
மாமலர்ப்பெருங்கடவுளும் மயங்கினான்
என்றால்
நாமினிச்சில அறிந்தனம் என்பது நகையே''

''ஒரு எழுத்துக்குப் பொருள் தெரியாதவன் உலகைப் படைப்பதா?'' என எண்ணிய முருகப் பெருமான் பிரமனை சிறையிலடைத்து பிரமன்



தொழிலான படைப்புத் தொழிலைத் தானே செய்தார். பிரமனை விடுதலை செய்யுமாறு தேவர்கள் சிவபெருமானை வேண்ட சிவபெருமான் தனது அணுக்கத் தொண்டரான நந்தி தேவரை அனுப்ப, முருகன் பிரமனை விடுவிக்க மறுத்தார். சிவபெருமான் நேரே வந்து கூறிய காலத்தும் ''அகந்தையுள்ள பிரமன் சிறையிலே இருப்பதுதான் பொருத்தம்'' என்றார் முருகன்.

''மகனே! உன் செய்கை என்ன எனப் புரியவில்லை. பிரமனை விடுதலை செய்யுமாறு நந்தியை அனுப்பினேன். மறுத்தாய். நேரில் வந்து கூறினாலும் மறுக்கிறாயே'' எனக் கோபங் கொண்ட மாதிரி சிவபெருமான் முருகனைக் கேட்டார்.

''மைந்த நின் செய்கை என்னே மலரயன்
சிறைவிடென்று
நந்தி நம் பணியால் ஏகி நவின்றதும்
கொள்ளாய்: நாமும்
வந்துரைத்திடினும் கேளாய்! மறுத்தெதிர்
மொழிந்தாய் என்னைக்
கந்தனை வெகுள்வான்போலக் கழறினான்
கருணை வள்ளல்.''

தந்தை சொல் மறுக்க மனமில்லாமல் பிரமனை விடுதலை செய்தார் முருகப்பெருமான். பிரமன் சென்ற பின் சிவபெருமான் முருகப் பெருமான் நோக்கி ''ஓம் என்ற ஓரெழுத்திற்குப் பொருள் தெரியாது எனப் பிரமனைச் சிறையிலிட்டாய். அதன் பொருள் என்ன?'' எனக் கேட்டனர்.

அதற்கு முருகப்பெருமான் ''எல்லாம் அறிந்த என் தந்தையே! (எல்லாம் அறிந்த உமக்கு ஓம் என்ற எழுத்தின் பொருள் தெரியாதா? எனக் கேட்டுவிட்டார்) உலகமாதாவான என் அன்னைக்குத் தாங்கள் உபதேசித்தீர்களே! அதை ரகசியமாகத் தானே உபதேசிக்கவேணும்!'' என்று கேட்டார்.

''முற்றொருங் குணரும் ஆதிமுதல்வ! கேள்!
உலகமெல்லாம்
பெற்றிடும் அவட்கு நீ பிறருணராத வாற்றால்
சொற்றதோரினைய மூத்தொல் பொருள்
யாரும் கேட்ப
இற்றென இயம்பலாமோ? மறையினால்
இசைப்பதல்லால்''

என்றார்.

பிரணவத்தின் பொருளைக் கூறும்முருகன் உயரிய நிலையிலிருக்க தான் அவருக்குக் கீழே இருப்பது மாதிரி காட்டுதற்காக,

சிவபெருமான் முருகப்பெருமானைத் தன் கையில் தாங்கி கொள்ள முருகப்பெருமானது திருவாய் சிவபெருமானது திருச்செவிக்கு நேராக அமைந்தது. முருகப்பெருமான் தலை சிறிது உயர அதற்குச் சிறிது தாழ்ந்த நிலையில் சிவபெருமான தலை அமைந்தது. அந்நிலை யில் முருகனை ஓம் குமாராய நம: என கூறி உபதேசம் கேட்டனர். இவ்வரிய அழகிய காட்சியை

''நாதா குமரா நம வென்றரனா்
ஓதாய் என ஓதிய தெப்பொருள்தான்
வேதா முதல் விண்ணவர் சூடுமலர்
பாதா குறமின் பத சேகரனே''

என தமது கந்தரனுபூதியில் பாடி வணங்கினர்.

சிவபெருமானுக்குப் பிரணவ உபதேசம் செய்தமையால் இத்தலத்தை சுவாமிமலை என அழைத்தனர். சுவாமிமலை ஏறுவதற் கான அறுபது படிகளும் பிரபவ முதல் அட்சய வருடம் வரையுள்ள அறுபது வருடங்களைக் குறிக்கும் என்பர்.

சுவாமிமலை என்னும் திருவேரகத்தின் பெருமையைக் கூறாத புலவரே கிடையாது என்னலாம்.

''வரைத் தடம்புரை மழவிடை எம்பிரான்
மனமகிழ்ந்திட வாக்கால்
இரைத்த பல்கலைப் பரப்பெல்லாம்
திரட்டிமற்று
இது பொருளென மேனாள்
உரைத்த தேசிகா''

எனப் பேசுகிறார் திருச்செந்தூர் பிள்ளைத் தமிழாசிரியரான பகழிக்கூத்தர்

''பொன்னங் கடுக்கைப் புரிசடையோன்
போற்றிசைப்ப
முன்னம் பிரமம் மொழிந்தோனே''

என்கிறார் குமரகுருபரசுவாமிகள்.

''ஆறெழுத் தடக்கிய அருமறைக் கேள்வி
நா இயல் மருங்கின் நவிலப் பாடி
விரை உறு நறு மலர் ஏந்திப் பெரிது
உவந்து
ஏரகத்துறைதலும் உரியன்''

என்கிறது திருமுருகாற்றுப்படை.

''ஓமெனும் எழுத்திற் பிரமம் பேசிய
நான்மறை விதியை நடுங்கு சிறைவைத்தும்
படைப்புறு முதல்வன் முதற் கூடித்
தாதையுரைப்பத் தளையது விடுத்தோய்''

எனப் பேசுகிற

''ஈசருடன் ஞானமொழி

என இவ்வரலாற்றைப் பேசுகிற

நமக்கெல்லாம் கல்விச் செருக்கு வரா நமக்கு நற்கலைகள் யாவும் அருளுமாறு தகப பன் சுவாமியான சாமிநாதப் பெருமானைப் போற்றி வணங்குவோம். ஓம் குமாராய நம:

சுவாமிமலை தீர்த்த விசேடம்.

பிறரது ஆடைகளைத் திருடி விற்றுப் பிழைக்கும் அந்தணன் ஒருவன் தொழுநோயால் பீடிக்கப்பட்டு அலைந்து சுவாமிமலை வந்து ஒரு வீட்டில் புகுந்து உணவைத் திருடி உண் டான். வீட்டில் உள்ளவர்கள் அவனைப் பிடித்து அடித்து ஒருகிணற்றில் தள்ளினர். அக்கிணற்றின் பெயர் வச்சிர தீர்த்தம். இரவு பூராவும் தண்ணீரில் மூழ்கிக் குளிரில் நடுங்கி அலறினான். பொழுது விடிந்ததும் அவன் அலறலைக் கேட்டு ஊரிலுள்ளவர் அவனைக் கிணற்றினின்றும் எடுக்க தன் உடலிலிருந்த குட்ட நோய் நீங்கித் தங்க நிறமாக இருக்கும் தன்மை கண்டு அதிசயித்தான்.

யக்ஞமித்திரன் என்ற அந்தணனின் ஊமை யாயிருந்த மகன் இந்த தீர்த்தத்தில் மூழ்கி ஊமைத் தன்மை நீங்கியது மட்டுமல்ல. பெரும் புலவனாக விளங்கினான் என ஒரு வரலாறு உண்டு.

நேத்திர புட்கரிணி என்ற நீர் நிலையும் கண்ணொளி அளிக்கும் தன்மையுள்ளது என்பர்.

கொங்கு தேசத்தான் ஒருவன் இம்மலை யின் மீது வந்து விநாயகரை வணங்கி கண் பெற்றான். விநாயகருக்குக் கண்கொடுத்த விநாயகர் எனப் பெயர் உண்டு.

பிறவியாகிய நோயை நீக்கி, ஞானக் கண்ணளிக்கும் முருகப்பெருமான் உடல் நோயையும் குருட்டுத் தன்மையையும் நீக்குவ தில் அதிசயம் என்ன? அதிசயம்அனேகமுற்ற பழனிமலைமீதுதித்த அழகு திருவேரகத்தின் பெருமானான சுவாமிநாதப் பெருமானின் அருள் பெற்று உய்வோமாக.

வெற்றி வேலுற்ற துணை.

---

ாளே
ருவரு
ம பக்கு
த்தைப்
விளக்கம்
ர்த்தேன்.
து ஒப்பற்ற
என் உள்ளத்
ந்து என்னை
னர்த்தி அருளி
அனுபவத்தைச்

தேன் விழித்தலுந்
தன்னு ன் இணையிலி
பொன்னு ரிசடை நந்தியும்
என்னுற் றறிவ விழித்தானே''.
(திருமந்திரம் 2859)

அருள் அனுபவம் மனதிற்கும், வாக்கிற்கும், ஐம்புலன்களுக்கும் அப்பாற்பட்டது. பரம்பொருளை அழியும் பொருள்களால் அளக்க முடியாது. அருள் அனுபவம் பெற்ற பெரியோர்கள் வியப்புண்டு. அன்பு மேலிட்டு, பேச்சற்ற நிலைக்கு வந்துவிடுகின்றனர். அந்த நிலையையே அவர்கள் பேரின்ப நிலையாக கருதுகிறார்கள். ''பெற்றார் உலகுடன் பேசாப் பெருமையே'' என்பார் திருமூலர். அருள் அனுபவத்தை வெறும் சொற்களாலும், மொழிகளாலும் மட்டும் விளக்கிவிட முடியாது. இறைவனைத்தம்முள் உணர்ந்த பின்னர் பேரின்ப வெள்ளத்தில் திளைத்து நிற்கும் இறை உணர்வாளர்கள் தங்களுடைய அனுபவத்தைச் சம்பிரதாய முறையில் மொழியைப் பயன்படுத்தி மக்களுக்கு தெளிவாக்க முற்பட்டாலும், அவர்களுடைய உள்ளக்கிடக்கை, பண்பட்ட உணர்வினை, மொழிகள் முழுமையாக பிரதிபலிக்காது என்பது அறிவாளர்கள் நமக்கு கூறிக்கொள்ளும் உண்மையாகும். எனினும் மக்களுக்குத் தங்களது உணர்வை பகிர்ந்து கொடுக்க வேண்டிய காரணத்தால் அவர்கள் மொழியினைக் கையாளுகிறார்கள். உண்மையில் ''சும்மா இருக்கும் சுகம்'' மொழிக்கு அப்பாற்பட்டது. இந்த நிலையில் அருள் அனுபவத்தைச் சாத்திரங்களிடமிருந்து நூல்களிடமிருந்தும் பெற்றுக்கொள்ள முடியாது. சாத்திர நூல்கள் ஒரு வழியை-பாதையை காண்பித்துக் கொடுக்கலாம். ஆனால், சென்று அடைய வேண்டிய இடம் சாதகனுடைய சாதனையைப் பொறுத்திருக்கின்றது. நூல் அறிவு பெற்று மட்டும் இறைவனை அடையமுடியாது என்பது அருளாளர்களுடைய அனுபவமாகும். தவம், சீலம், நோன்பு போன்றவற்றின் அடிப்படையில் இறைவனை அடையவேண்டிய பல கோட்பாடுகளையும் நெறிமுறைகளையும், நேர்மையுடனும், முழுமனதுடனும் கையாளும்போது வந்தடையக்கூடிய இன்பம் இறை இன்பமாகும் என்பது காரைக்கால் அம்மையாருடைய அனுபவமாகும். அந்த நிலையில் இறைவனை எந்தக் கோலத்தில், எந்த வடிவாக எண்ணியும், பார்த்தும் எத்தனகய தவம் செய்தாலும் அந்தக் கோலத்தில், அந்த வடிவிலேயே வந்து இறைவன் அருள்புரிவான் என்கிற உண்மையை நமக்குத் தெளிவாக்குகின்றார் காரைக்கால் அம்மையார்.

''நூல்அறிவு பேசி நுழைவுஇலா தார்திரிக!
நீல மணிமிடற்றான் நீர்மையே-மேல்உவந்தது
எக்கோலத்து எவ்வுருவாய் எத்தவங்கள் செய்வார்க்கும்
அக்கோலத்து அவ்வுருவே ஆம்''

(அற்புதத் திருவந்தாதி)

''ஏதுக்களாலும் மிக்க மொழிகளாலும் சோதிக்க வேண்டா சுடர் விட்டுளன் எங்கள் சோதி'' என்றார் திருஞானசம்பந்தர்,

இறை அனுபவம் இறை அருளால்தான் கிட்டும். இறை அருள் ஆசான் உருவமாக எழுந்தருளி, உபதேசித்தருளி பக்குவப்பட்ட உயிருக்கு இறை அனுபவத்தைக் கூட்டி வைக்கும், எல்லாவற்றிற்கும் காரணமான பொருளை ஏடுகள், சுவடிகள் மட்டும் மூலமாக அனுபவித்து விடமுடியாது.

''காட்டுங் குறியும் கடந்தவர் காரணம்
ஏட்டின் புறத்தில் எழுதிவைத் தென்பயன்
கூட்டுங் குருநந்தி கூட்டிடி னல்லது
ஆட்டின் கழுத்தில் அதர்கிடந் தற்றே''
(திருமந்திரம் 2937)

எழுத்தில் அடங்கி நிற்காத பரம்பொருளை விரிவுபடுத்திப்பேசவும்,உரை செய்யவும் முயலுகின்றோம். இந்த முயற்சி வெற்றி பெறுமா? பெறாது. வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. ஒரு கரையில் நின்றுகொண்டு வெள்ளத்தைப் பார்க்கலாம். மறுகரை நமது கண்ணுக்கு எட்டாத அளவுக்கு வெள்ளம் ஓடுகிறது. அதே போல உரையற்ற பரம்பொருளுக்கு உரை காண முயலுவது வீணான முயற்சியாகும். ஆனால் ஒன்று, இறைவன் நம்முடைய சிந்தைக்கு அகப்படக்கூடியவன்தான். அந்த சிந்தை எவ்வாறு இருக்கவேண்டும்? அது தெளிந்த சிந்தையாக இருக்க வேண்டும். திரையற்ற நீர்போல் சிந்தை தெளிந்திருக்கும்பொழுது அந்த சிந்தையில் இறைவன் வெளிப்படுவான். அதுவே உயர்ந்த தியான நிலையாகும். மோன சமாதியுமாகும். பேரின்பம் சுரக்கும் அனுபவ நிலையுமாகும்.


''உரையற்றது ஒன்றை உரைசெய்யும் ஊமர்காள்
கரையற்றது ஒன்றைக் கரைகாண லாகுமோ?
திரையற்ற நீர்போல் சிந்தை தெளிவோர்க்குப்
புரையற்றிருந்தான் புரிசடை யோனே''.
(திருமந்திரம் 2955)

(தொடரும்)


வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A.,Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.



சென்னை அருள்மிகு வடபழனியாண்டவர் ஆலயத்தில் நம் அறநிலையத் துறை ஆணையாளர் திருமிகு வ.ராமதாஸ், ஐ.ஏ.எஸ்., அவர்கள் 'வடபழநி அந்தாதிநூலை' வெளியிட்டார்கள். ஆலய அறங்காவலர் குழுத்தலைவர் திரு பி.சி. இராமமூர்த்தி அவர்கள் முதல் படியைப் பெற்றுக் கொண்டார்கள். ஆலய நிர்வாக அதிகாரியும் உதவி ஆணையாளருமான திரு ஏ.ஜெயராமன் அவர்கள் உடன் உள்ளார்கள்.



வல்லக்கோட்டை அருள்மிகு கோடையாண்டவர் ஆலயத்தில் மடப்பள்ளித் திருப்பணியை நம் ஆணையாளர் திருமிகு வ.ராமதாஸ், ஐ.ஏ.எஸ்., அவர்கள் தொடங்கிவைத்தார்கள். திருப்பணி ஆர்வலர் திரு எம்.வி.அரங்கநாதன் அவர்கள் உடன் உள்ளார்கள்.



இந்தியச் சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சியில் அமைக்கப்பட்டிருந்த அரசுத்துறை அரங்கங்களில் சிறந்த அரங்குகளுக்கான முதல்பரிசை நம் அறநிலையத்துறை அரங்கம் பெற்றது. இதற்கான பரிசை மேதகு ஆளுநர் அவர்களின் ஆலோசகர் திருமிகு வே.கார்த்திகேயன் ஐ.ஏ.எஸ்., (ஓய்வு) அவர்கள் வழங்க நம் அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு வ.ராமதாஸ் ஐ.ஏ.எஸ்., அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். அரங்க வடிவமைப்பிற்கான முதற்பரிசை துணை ஆணையாளர் திரு தி.ஜெயராமன் பி.ஏ., பி.எல்., அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

